குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்யத்தைத் தரும்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol.13 No. 39 25-10-'42 Price 2 Annas

கலக்கமும் கவலையும்

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்
எழுதியது

அடக்குமுறைகளில் இறங்கிப் பத்து வாரங்கள் ஆகின்றன. அதிகாரிகள் எதிர்பார்த்த பலன் கிட்டிவிட்டதா? நிலைமை கட்டுக்கடங்கி வருவதாக அவர்கள் நினைக்கின்றனர். ஸ்தூலமாகப் பார்க்கிறவர்களுக்கு அதில் ஓரளவு உண்மையுண்டு. கலவரச் சின்னங்கள் குறைந்து வருவதாகத் தோன்றுகிறது. தணிக்கை முறைகள் கடுமையாக உள்ளவரையில் அதையும் நிச்சயமாக நிதானிப்பதற்கில்லை. குறைந்து வருவதாகவே வைத்துக்கொள்வோம். கொந்தளிப்பின் வேகம் குறைந்திருக்கலாம். கொந்தளிப்புக்குக் காரணமான விரஸம் குறைந்துவிட்டதாகச் சொல்ல இயலுமா? நிதானப் பக்குவம் பூத்த ஸ்ரீமான் வெங்கடராம சாஸ்திரி அதை மறுக்கிறார். விஷயத்தை மிகைப்படுத்திப் பேசக்கூடியவரல்ல. விரஸத்தை விலக்கப் பிரயாசைப்படுபவர். அவருக்கே பொறுக்கவில்லை. இன்றைக்கு நாட்டிலே காணும் கசப்பு என்றைக்கும் இருந்ததில்லை என்கிறார். அப்படியே விட்டு வைப்பது ஆபத்தாய் முடியும் என்றும் சொல்லுகிறார்.

யார் கேட்கிறார்கள்? கவர்ன்மெண்டிடம் குறையிருக்கிறதென்றால் குற்றமாகப்படுகிறது. எது செய்தாலும் தாங்கிப் பேச வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. உடன் நில்லாதவர் எதிரி! அதிகாரம் சர்வவியாபகமாகிவிட்டது. அதிகாரத்தைச் செலுத்துவோர் சந்தேகமோ, சங்கோசமோ கொள்ளக்கூடாது. சுவாதீனத்தைக் கட்டுப்படுத்தவோ மட்டுப்படுத்தவோ நோக்கமில்லை. நிலைமையைச் சமாளிக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அதற்காக எது செய்தாலும் கவலைப்படத் தேவையில்லை. கவன்மெண்டார் காட்டிக் கொடுத்துவிட மாட்டார்கள். காலம் நேரும்போதெல்லாம் உறுதி கூறி வருகின்றனர். கிரமத்தவறாக நடந்து கொண்டதாகச் சில இடங்களில் புகார்கள் கிளம்பின. பாரபக்ஷமில்லாமல் விசாரணை நடத்த அனுமதிக்கப்படவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியில் சட்டமே சர்வ வல்லமை வாய்ந்ததென்று சொல்லுவதுண்டு. சட்டம் தர்மத்தை அஸ்திவாரமாகக் கொண்டது. ஏக தேசத்தில் சமய சஞ்சீவியாய்ச் செய்வதல்ல. அவசர நிலைமைகளில் அசாதாரண அதிகாரம் ஆண்டால் விசாரணை செய்வதும் வழக்கம்: மறுப்பதும் முறையல்ல; ஜனநாயகத்திற்கு அழகல்ல. ஜன சம்மதமே அதிகாரத்தின் அஸ்திவாரம். அஸ்திவாரம் கலகலக்கக் விடுவது அசட்டுத் தனம். பிடிவாதமும் சேர்ந்து கொண்டுவிட்டது!

என்ன செய்வது? யோசிக்க யோசிக்க கவலையே மேலிடுகிறது. எதிராளி எட்டியெட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறான்: காலம் கனியக் காத்திருக்கிறான். இந்த சமயத்தில் ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையே வேற்றுமை விரஸமாவது விபரீதமாகும். இடைச் சண்டையில் வெளிச் சண்டையை மறந்துவிடக்கூடும். மறப்பது மதியீனம்; மறக்கக்கூடாது. ஞாபகம் நிலைத்தால் வழி துலங்கும்: காலம் மாறிவிட்டது. அன்னியரை அடக்கியாள்வதென்பது இனி ஆகாத காரியம். ஆசையும் அடங்கியிருக்கவேண்டும். ஏகாதிபத்தியப் பித்தம் ஏகாதிபத்தியத்தையே வேண்டிய அளவு பிடித்துவிட்டது; எதிர்கால வாழ்வில் அபிப்பிராயம் ஒன்றுபட்டு விட்டால், இடைக் காலத்தில் பழைய வாசனை வீசுவானேன்? பரஸ்பர அவ்நம்பிக்கையில் அது முளைத்தது. களைந்தெறியக் காலஹரணமேன்? இவ்வளவு காலம் பொறுத்தவர் இன்னும் இரண்டு வருஷம் பொறுக்கக்கூடாதா என்கிறார் ராஜாஜி.

பொறுக்கத் தயார். பொறுமைக்குப் பரிசு உண்டானால் இந்தியரைத் தாண்டிச் செல்லாது. பொறுத்தால் மாத்திரம் போதுமா? யுத்தத்தில் வெல்லப் பொறுமை போதாது. மக்கள் மனம் குளிர்ந்து வெற்றிக்கு விசை காணவேண்டும். பொறுப்புள்ள தேசிய கவர்ன்மெண்டுதான் இதற்குச் சிறந்த வழி என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதற்கு இன்றுள்ள பிடி தளர வேண்டும். இந்தியர் பொறுமை காட்டும்போது, ஆங்கிலேயர் பெருந்தன்மை காட்டினால்தான் காரியம் கைகூடும். பெருந்தன்மை அவர்களுக்குண்டு. ஆழத்தில் அடங்கிக் கிடந்தது மேலே கிளம்பி வருகிறது. அங்குள்ள அறிவாளிகள் காட்டிவரும் மனமாறுதலே இதற்குப் போதிய சான்று. ஆனால் இன்னும் உருப்பெறவில்லை; வலுப்பெறவில்லை. அமெரிக்கக் கண்டனம் ஆங்கிலேயரை ஆத்ம சோதனையில் ஆழ்த்தி வருகிறது; உருவாக்கி வலுவூட்டி வருகிறது. இந்தியாவில் ஆளுவோரிடையே பிரதிபலிக்க வேண்டும். காலப் பிற்பாடாகாமல் காக்கவேண்டும். கவலை அதுதான்.

புது டில்லியில் லீக் சார்பில் புதிதாக ஆரம்பிக்கபபட்ட "டான்" என்ற தினசரிப் பத்திரிகையின் துணை ஆசிரியர் பதவியை ஏற்க ஜனுப் ஆமத் ஹாஸன் புறப்படுமுன் அவருக்கு "வுட்லண்ட்ஸ்" தோட்டத்தில் ஒரு உபசாரம் நடத்தி வைக்கப்பட்டது. ஹிந்து ஆசிரியர் ஸ்ரீமான் கே. ஸ்ரீநிவாஸனும்" மித்திரன் ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸனும் ஜனுப் ஹாஸனுடன் உட்கார்ந்திருப்பதை படத்தில் பார்ககலாம். (பி. பி. பி.)

சென்றவார நிகழ்ச்சிகள்

கல்கத்தாவில் ராஜாஜி

இம்மாதம் 15-ந் தேதி இந்தியாவின்பெரிய பாதிரியார் தலைமையில் கல்கத்தா கிராண்டு ஹோட்டலில் நடந்த கூட்டத்தில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் பேசினர். இந்தியா விஷயத்தில் கல்லாக இருக்கும் பிரிட்டிஷாரின் மனம் நிச்சயமாகக் கரையுமென்பதே தமது நம்பிக்கை என்றும். ஆனால், இந்தியா ஒரே முகமாக நின்று தன்னுடைய கோரிக்கையை வற்புறுத்த வேண்டுமென்றும் ராஜாஜி கூறினர்.

இப்பொழுது நாட்டில் நடந்து வரும் நாச வேலையை ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் பலமாகக் கண்டித்தார். அந்த வேலையினல் இந்தியாவின் லட்சியம் ஸித்திக்காதென்றும், இந்தியாவின் எதிர்காலம் அபிவிருத்தியடையாதென்றும், எந்த அம்சத்திலிருந்து பார்த்தாலும் இது மிகவும் அபாயமானதென்றும் அவர் தெரிவித்தார். "நாம் வேறு என்ன செய்ய முடியும்? என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். வேறு ஒன்றும் செய்ய முடியாதென்றல் நாம் சும்மா இருப்போம். ஒன்றும் செய்ய முடியவில்லையே எனபதற்காக தவருன காரியத்தை நாம் செய்ய வேண்டாம்." இது தான் என்னுடைய அபிப்பிராயம். இதை நான் தெளிவாகவே கூறுகிறேன் என்று அவர் கூறினர்.

நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக "உண்மையான முறையில் நடந்து வரும் முயற்சிகளை" எதிர்ப்பதாலும், "சுதந்திரத்துக்காக நடந்து வரும் தேசீயத் திட்டத்தை"க் கண்டிப்பதாலும் மக்களுடைய அப்பிரீதிக்கு நான் ஆளாக நேரிடுமென்பது எனக்குத் தெரியும். எனினும் இறுதியில் எல்லாம் நன்மையாகவே முடியுமென்பதே எனது திடமான நம்பிக்கை"என்றும் அவர்குறிப்பிட்டார். இந்தியாவின் எதிர் காலத்தில் தமகுள்ள நம்பிக்கையே தமது இந்த அபிப்பிராயத்துக்குக் காரணமென்று ஸ்ரீமான் ஆச்சாரியார் கூறினர்.

அப்பால் ராஜாஜி யுத்தத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். "இனி யுத்தம் அதிக காலத்துக்கு நடக்காது. நம்முடைய சுதந்திர லட்சியம் வெற்றி பெறுவதற்காக நாம் நெடுங்காலம் பொறுத்து விட்டோம். இன்னும் இரண்டு வருஷ காலம் நாம் பொறுக்கக்கூடாதா? அதற்கிடையே நம்முடைய காரியத்தைக் கெடுக்கக்கூடிய வகையில் நாசவேலையில் இறங்காமலிருக்க முடியாதா? யுத்தம் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. யுத்தத்தில் நாமிருப்பது போன்ற நிலைமையே ஏற்பட்டிருக்கிறது. நாம் சுதந்திரம் பெறுவது நிச்சயமாயின், இந்த யுத்தத்தில் தோற்றுவிட்டு பிற்பாடு நமது சுதந்திரத்துக்காக மேலும் நூறு வருஷகாலம் பொறுத்திருப்பது சரியா? நம்முடைய தேசத்தை இழந்துவிட்டு, ஜப்பானியர் வசம் சிக்கினல் நமமுடைய சுதந்திரத்துக்காக நாம் மேலும் 100 வருஷகாலம் காத்திருக்க வேண்டியிருக்கும். ஜப்பானியர் நம்மீது ஆதிக்கம் செலுத்த நாம் இடம்கொடுக்கக் கூடாது. இப்பொழுது இந்தியாவில் சிலர் செய்துவரும் காரியங்கள் ஜப்பானை இங்கு அழைப்பதாகவே இருக்கிறது. இத்தகைய காரியங்கள்நடக்கவேண்டுமென்பதுதான் ஜப்பானின் விருப்பம். ஆகவே இந்த "நாசவேலை"யினல் ஒரு நன்மையும் கிடையாது" என்று அவர் கூறினர்.

* * * * *

நவநகர் மகாராஜாவின் யோசனை

வைஸ்ராய் சபையை பூர்ணமாக இந்தியர் மயமாக்கவேண்டுமென்றும், உள்நாட்டு வரவு செலவு விவகாரங்களில் பிரிட்டிஷ் ஸர்க்கார் தலையிடக்கூடாதென்றும் நவநகர் மகாராஜா மிஸ்டர் ஜார்ஜ் ஸ்லோகோம்புடன் சம்பாஷிக்கையில் யோசனை கூறியதாக "ஸண்டே எக்ஸ்பிரஸி"ல் வெளியிடப்பட்டிருக்கிறது.

ராணுவ் நடவடிக்கைகள் போரை நடத்துவது முதலியன சம்பந்தமான விஷயங்கள் இப்பொழுதுபோல், ஸேனதிபதி, யுத்த மந்திரி சபை ஆகியோரின் கையில் இருக்கலாமென்றும், இனி ஏற்படப் போகும் தேசீய ஸர்க்காருக்கு ஓர் அறிகுறியாக வைஸ்ராய் சபை என்பதை மந்திரி சபை என்று மாற்றினல் நலமாயிருக்குமென்றும், அவர் கூறுகிறர்.

கிரிப்ஸ் பேச்சு வார்த்தை முறிந்ததற்குக் காரணம் பற்றி மகா ராஜா பின்வறுமாறு கூறுகிறர்:—காங்கிரஸ் கார்யக்கமிட்டியினர் கோரிய எல்லாவற்றையும் கொடுத்து விடுவதுபோல் கிரிப்ஸ் யோசனைகள் தோன்றின. அவர்களில் பெரும்பாலோர் அவற்றை ஒப்புக்கொள்ள விருந்தனர். பிறகு திடீரென்று அவர்களுடைய மனோபாவத்தில் மாறுதலேற்பட்டது. ஜப்பானியர் இந்தியாவைப் படையெடுக்க விருந்ததாக அப்பொழுது காங்கிரஸ் தலைவர்கள் நம்பினர். அவர்கள் அந்த யோசனைகளை ஒப்புக்கொண்டிருந்தால், பிரிட்டிஷ் யுத்த முயற்சிக்கு உதவி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். ஆனல் அவர்கள் அவற்றை நிராகரித்தால், தாங்கள் ஆதியிலிருந்து யுத்தத்தை ஆதரித்து வரவில்லையென்று படையெடுப்போரிடம் கூறி அவர்களிடமிருந்து பாதுகாப்பைக் கோரியிருப்பார்கள்.

காங்கிரஸ் பூர்ணமாக காந்திஜியின் ஆதிக்கத்திலேயே இருக்கிறதென்று மகாராஜா மிஸ்டர் ஸ்லோகோம்பிடம் கூறினர். அவர்மேலும் கூறியதாவது:—காந்திஜி உயிரோடிருக்கும்வரை அவரே ஒப்பற்ற தலைவராயிருப்பார், இந்தியரின் மனப்பான்மையை மற்ற யாரையும் விட காந்திஜியே நன்கறிவார். நாம் ஒரு நூதனமான ஜனம்; யாராவது நம்மைப் பணமோ அதிகாரமோ கேட்டால் நாம் அதை மறுத்து விடுகிறேம். ஆனல் காந்திஜிபோல் லோகாயதமான எல்லா விஷயங்களையும் துறப்பதுபோல் யாராவது தோன்றினல், நம்மிடமுள்ள எல்லாவற்றையும் நாம் அவரிடம்கொடுக்கிறேம். இந்திய சுதந்திரத்தில் எனக்குள்ள ஆர்வம் யாருக்கும் குறைந்ததல்ல. ஆனல் நாளைக்கு நமக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டால் மறுநாள் நாம் அதை இழக்க வேண்டியதுதான். சுதந்திரத்தைப் பாதுகாக்க நமக்கு சக்தி ஏற்படும் வரை நாம் அதைக் கோரக் கூடாது.

* * * *

காமன்ஸில் மந்திரி பதில்

ஸிந்து முஸ்லிம் பிரதம மந்திரியான ஜனப் அல்லாபக்ஷ் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டதுபற்றி சென்ற 15-ந் தேதி காமன்ஸ் சபையில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

இந்தியா மந்திரி பதிலளிக்கையில், சென்ற 10-ந் தேதி இவ் விஷயமாக ஸிந்து கவர்னர் வெளியிட்ட அறிக்கையை எடுத்துக் காட்டினர். அவர் மேலும் கூறியதாவது:—

ஸிந்து பிரதம மந்திரி தாம் செப்டம்பர் மாதத்தில் வைஸ்ராய்க்கு எழுதிய கடிதத்தைப் பிரசுரித்ததன் மூலம் ஏற்பட்ட நிலைமையைக் குறித்து இந்திய ஸர்க்கார் என்னைக் கலந்து யோசித்தனர். இந்நிலைமையில் அவர் மேற் கொண்டு பதவியிலிருப்பது முறையல்ல என்ற கருத்தை நான் அங்கீகரித்தேன். ஆனல் அவரை நீக்குவதென இறுதியாக முடிவு செய்தவர் கவர்னர்தான். அதற்கு முன்னதாக அவர் பிரதம மந்திரியை நேரில் கலந்து பேசினர். பிரதம மந்திரி ஸிந்துக்கு வெளியே சென்றிருந்ததால்; கவர்னர் சென்ற 10-ந்தேதிக்கு முன் அவருடன் கலந்து பேச முடியவில்லை.

மிஸ்டர் ஸோரன்ஸன்:— இந்த முஸ்லிம் பிரதம மந்திரி தமக்கு வழங்கப்பட்டிருந்த பட்டங்களைத் திருப்பியனுப்பியதே இவரது டிஸ்மிஸுக்குக் காரணமா?

மிஸ்டர் அமெரி:—இல்லை. ஒரு பெரிய நெருக்கடியில் சட்ட சமாதானத்தை நிலைநாட்ட இந்திய ஸர்க்கார்எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை அவர் நேரடியாகக் கண்டித்ததும், அவர் வெளியிட்ட அறிக்கையில் காங்கிரஸின் போக்கைத் தாம் முற்றிலும் ஆதரிப்பதாகத் தெரிவித்ததுமே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்குக் காரணம்.

அந்தப் பிரதமமந்திரி துரோகியென்க் காட்டிக்கொண்டுவிட்டதால், அவரை டிஸ்மிஸ் செய்ததுபற்றி இந்நாட்டில் திருப்தி ஏற்பட்டிருப்பதாகக் கன்ஸர்வெடிவ் கட்சியைச் சேர்ந்த மிஸ்டர் மால்ஸன் கூறினர்.

* * * *

பிரிட்டிஷ் மந்திரி அறிக்கை

தொழில் இலாகா மந்திரியானமிஸ்டர் எர்னஸ்ட் பெவின் அறிவித்ததாவது:—

நாம் இந்தியாவுக்குத் திட்டமான உறுதியான ஒரு வாக்குத்தத்தம் செய்திருக்கிறேம். அதை நாம் நிறைவேற்றி வைக்கக் கூடுமென்றே நான் நம்புகிறேன். யுத்தம் முடிந்ததும் பிரிட்டன் தனது வாக்குறுதியைப்புறக்கணித்து விடுமென்று இந்தியா அஞ்ச வேண்டியதில்லை. உள் நாட்டுக் கலகம் எதுவுமின்றி இந்தியர்கள் தாங்களாகச் செய்துகொள்ளும் ஏற்பாட்டை யொட்டி அந்நாடு அவர்களிடம் ஒப்படைக்கப்படுமென நான் எண்ணுகிறேன். ஆனல், இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளேயே இருந்து வர வேண்டுமென்பதில் எனக்கு விசேஷ அக்கரையுண்டு.

டில்லியில் ஸேனதிபதிகள் மகாநாடு

புதிய டில்லிக்கு ஜேனரல் வேவல், ஜெனரல் ஆச்சின்லெக், ஜெனரல்ஸ்டில் வெல் ஆகியவர்கள் விஜயம் செய்திருக்கிறர்கள். இது பர்மாவை பிடிப்பதற்காக நேசதேசத்தினர் தாக்குதலைத் துவக்குவதற்காகப் பூர்வாங்கமாக இருக்குமென்று ரேடியோ நியூயார்க் விமர்சகர்கள் அபிப்பிராயம் கூறுகின்றனர்.

"நாஸித் தலைவர்கள் ஓலம்"

மிஸ்டர் சர்ச்சில் எடின்பரோ நகர சபையில் விசேஷ கௌரவத்தைப் பெற்றுக் கொண்டபொழுது பின் கண்டபடி பேசினர்:—

ரிப்பன் டிராப், கோயரிங், ஹிட்லர் ஆகியவர்கள் முன்னை விட அதிகமாகப் பேசி வருகின்றர்கள். அவர்களுடைய பேச்சுகள் அனைத்திலும் வழக்கமான டம்ப வார்த்தைகளைத் தவிர, அச்சத்தைக் குறிக்கும் ஒரு ஓலம் தொனிக்கிறதென்பதில் சந்தேகமில்லை. அவர்கள் குற்றத்திற்குத் தக்கவாறு தண்டனை கிடைக்குமென்பதையே அது காட்டுகிறது.

ருஷ்ய யுத்தம்

ஸ்டாலின்கிராடு நிலைமை நெருக்கடியாக விருக்கிறது. ரெட் ஸ்டார் பத்திரிகையின் யுத்த நிருபர்

'ஸ்டாலின்கிராடுக்கு வட பாகத்தை ஜெர்மனியர் 3 தினங்களாகத் தாக்கிவருகிறர்கள். அவர்கள் ரஷ்ய அரண்களை ஊடுருவிச் சென்று விட்டனர். தொழிலாளர் செட்டில்மெண்ட் பிரதேசத்தில் உக்ரமான போர் நடைபெறுகிறது. ஜெர்மன் படைகள் தொகையில் மிக்க அதிகமானவர்களாக இருப்பதால் இப்பிளவுகளை விசாலப் படுத்த முயன்று வருகிறர்கள்" என எழுதுகிறர்.

வால்கா நதிப் போக்குவரத்துதான் ஸ்டாலின்கிராடு பாதுகாப்புக்கு அத்யாவசியமானது. ஜெர்மன் விமானங்களும் பீரங்கிகளும் ஓயாமல் குண்டுகளை வீசி சுரங்கவெடிகளை வைத்து வருவதால் வால்கா நதி போக்குவரத்து அதிக கஷ்டமுள்ளதாகி வருகிறது. இரவு நேரம் தவிர மற்ற நேரத்தில் நதியின் மூலம் எதையும் கொண்டுவர முடியவில்லை.

சீவக சிந்தாமணி-18.

துறவு பூண்ட மங்கை

★

—வ. வேணுகோபாலன்— எழுதியது

சீவகனைத் தேடிச் சென்ற தோழர்கள் அவனைக் காணுமையால் இராசமாபுரத்திற்கு வந்து சேர்ந்தனர். தோழர்கள் சீவகன் பிரிவால் மனம் குழைந்து உடல் மெலிந்து உருகினர், 'சீவகனை எவ்வாறு தேடிக காண்பது?' என்று ஆலோசனை செய்தனர். 'காந்தருவதத்தை வருத்தமில்லாமல் இருப்பதால், சீவகன் வேறு எவ்விடத்திலேனும் மறைந்திருப்பானே? அவ்விதம் அவன் எங்கு இருந்தாலும் அறிந்து விடுவோம்' என்று எண்ணி ஒரு முடிவு செய்தனர். உடனே, பதுமுகன், புத்தி சேனன், தேவதத்தன், சீதத்தன் நால்வரும் காந்தருவதத்தையின் மாளிகைக்குச் சென்றனர். தோழர்களின் வரவை அறிந்த காந்தருவதத்தை அவர்களை வரவேற்று உபசரித்தாள். தோழர்கள் காந்தருவதத்தையை வணங்கி நின்று, சீவகன் இருக்குமிடத்தைக் கூறும்படிக் கேட்டனர். சீவகன் ஏமமாபுரத்தில் மறைந்திருப்பதையும், பிறவற்றையும் அவள் சொன்னள். சீவகன் ஏமமாபுரத்தில் இருக்கிறன் என்பதைக் கேட்டதும் அளவில்லாத மகிழ்ச்சி தோழருக்கு உண்டாயிற்று. ஆனந்தத்தால் கண்ணீர் பெருக எழுந்து குதித்தனர்; ஆரவாரம் செய்தனர்.

"அன்னையே! உம்மைத்தொழுதவர்களுக்குத் துன்பமெல்லாம் நீங்கும். அடியேம் மனமகிழ்ந்தோம். ஏமமாபுரம் சென்று சீவக சாமியின் பாதத்தைச் சேர்கிறேம், தாங்கள் சொல்லும் காரியம் உண்டேல் கூற வேண்டும்" என்றனர் தோழர். காந்தருவதத்தை மகிழ்ச்சியோடு சீவகனுக்கு ஒரு திருமுகம் (கடிதம்) எழுதிப் பிறர் வாசிக்காதவாறு, அரக்கிட்டுக் காதோலையால் முத்திரை செய்து அதைத்தோழரிடம் கொடுத்தாள். தோழர்கள் வணங்கித் திருமுகத்தைப் பெற்றுப் புறப்பட்டனர்.

காந்தருவதத்தையின் மாளிகையை நீங்கியதும் ஏமமாபுரம் போவதற்குத் தோழர்கள் ஆயத்தம் செய்தனர். விரைவில் இருபதினையிரம் குதிரைவீரர்கள் குதிரைகளுடன் தோழர்களின் கட்டளைப்படி வந்து சேர்ந்தனர். வெண்மையான கடலலைகள் போலக் குதிரைகள் வரிசை வரிசையாய் நின்றன. ஒரு நொடியில் நூறு காத தூரம் செல்வனவாகிய எருதுகளும், கோவேறு கழுதைகளும், ஒட்டகங்களும் பண்டங்களைச் சுமந்து வந்தன. சிறிது நேரத்தில், கண்ணைக் கவரும் காட்சியை யுடையதும், பச்சைக் கிளிகள் போன்ற நிறம் உடையதுமான குதிரைகள் நான்கு வந்தன, நபுல விபுலர்கள், கந்துக்கடன் முதலியவருக்குக் காவலாக இராசமாபுரத்திலேயே தங்கினர். பதுமுகன் முதலிய நால்வரும். அந்தப் பச்சைக் குதிரைகள் மீது ஏறினர். சங்கம், பறை முதலிய வாத்தியங்கள் முழங்கின. வாளும் வேலும் மின்னின. தோழர்கள் குதிரைப் படையுடன் ஏமமாபுரத்தை நோக்கிச் சென்றனர். பல காடுகளையும் மலைகள் பலவற்றையும் கடந்தனர். செல்லும் வழியில் மிக அழகிய சோலையைக் கண்டு அங்குத் தங்க எண்ணினர். அந்த இடம் தண்டகாரணியம் என்று தெரிந்ததும் தோழர்கள் மகிழ்ந்தனர். வண்டுகள் உறங்க, குயில்கள் கூவ, மயில்கள் நடனம் ஆடும் அந்தச் சோலையில் தோழர்கள் படையுடன் தங்கி இளைப்பாறினர். பூக்களின் வாசனையாலும் பொன் போன்ற கனிகள் நிறைந்த மரங்களாலும் உள்ளம் குளிர உடல் குளிர வீசும் மந்தமாருதத்தாலும் தேவருலகைப் போன்று விளங்கியது அந்தச் சோலை. அதன் நடுவில், முனிவரும் யோகியரும் தவம் செய்துகொண்டிருந்த தாபதப் பள்ளி என்னும் இடத்தைக் கண்டனர் தோழர். தாபதப் பள்ளியின் அழகையும் பிற காட்சிகளையும் பார்ப்பதற்கு விரும்பித் தோழர் சுற்றித் திரிந்தனர்.

பெரிய மரத்தின் நிழலில் பூக்களைச் சொறியும் செடிகளுக்கு அருகில் மரப் பலகையில் அமர்ந்திருக்கும் துறவு பூண்ட மங்கை ஒருத்தியைத் தோழர் கண்டனர். காவியுடை அணிந்து நீண்ட கூந்தல் சடை போல சுருண்டு தொங்க மெல்லிய மேனி வருந்த துறவுக் கோலத்துடன் அம்மங்கை அமர்ந்திருந்தாள். தோழர்கள் அந்த மங்கையைக் கண்டதும் வியப்பும் அச்சமும் உடையவரானர்கள். 'இம்மங்கை பொற்றாமரையில் வாழும் திருமகளோ! வீணை வித்தகியான நாமகளோ! உமா தேவியோ!' என்று எண்ணி அதிசயித்தனர். சச்சந்தனை இழந்த விசயை துறவுக் கோலம் பூண்டு அவ்வாறு நோன்பு கொண்டிருந்தாள். அவள் 'சீவகனை மயானத்தில் வீட்டுப் பிரிந்து வந்தோமே' என்று எண்ணி நாள்தோறும் மனம் உருகினள். 'சீவகனைக் காண்போம்' என்ற எண்ணத்தால் அவள் உயிர் உடலில் தங்கி இருந்தது.

"தேவி! தாங்கள் யார்? இங்கு இருப்பதன் காரணம் என்ன? தங்கள், ஊர், குலம் முதலியவற்றையும் தயவுசெய்துசொல்ல வேண்டும்" என்று தோழர் வினவினர்.

"வீரர்களே! யான் இங்கு வந்ததையும், என் குலத்தையும் இந்த வேஷத்தோடு யான் கூறலாகாது. நீங்கள் யார்? இங்கு வந்த காரணம் என்ன? உங்கள் வரலாற்றைக்கூற முடியுமானல் சொல்லுங்கள்" என்றள் விசயை,

விசயையின் சொற்களைக் கேட்ட தோழர் வாய் பேசாதிருந்தனர். உடனே தேவதத்தன் விசயையின் முன் சென்று வணங்கிக் கூறலானன்.

"தேவி! செல்வத்தால் சிறந்த இராசமாபுரம் என்னும் நகர் எங்களுடைய ஊர்; அந்நாட்டின் பெயர் ஏமாங்கதநாடு. அந்த நகரத்தில் சச்சந்தன் அரசனக இருந்தான். அவன் மந்திரி சாகரனுக்கும் குருதத்தை என்பவளுக்கும் பிறந்த இவன் சீதத்தன். சச்சந்தனுடைய குருவாகிய அசலனுக்கும் திலோத்தமை என்பவளுக்கும் பிறந்த இவன் புத்திசேனன். அரசனுக்கு உரிய செட்டியாகிய தனபாலனுக்கும் பவித்திரை என்பவளுக்கும் பிறந்த இவன் பதுமுகன். அரசனுக்கு உயிர் போன்றவனை விசயதத்தனுக்கும் பிரீதிமதி என்பவளுக்கும் பிறந்தவன் யான்; என் பெயர் தேவதத்தன். சச்சந்தன் இறந்த அன்றே கந்துக்கடன் பெற்ற நம்பியோடு நாங்கள் பிறந்தோம். எங்கள் பெற்றேர் அந்த நம்பிக்கு எங்களைத் தோழராகக் கொடுத்தார்கள்; ஒரு வருஷத்திற்குப் பின்; நபுலன் விபுலன் நந்தட்டன் என்பவர் பிறந்தனர். அவர்களுடன் நாங்கள் ஐவரும் சேர்ந்து திசை யானைகள் எட்டைப்போல் வளர்ந்து திரிந்தோம். நல்லாசிரியரிடம் பல நூல்களைக் கற்றேம்; வில், வாள், வேல் முதலிய படைத் தொழில்களையும் வீணைத் தொழிலையும் கற்றேம். மல் யுத்தம், தேர்ப் போர், யானைப் போர், குதிரைப் போர், காலாட் போர் முதலியவற்றில் ஸமர்த்தரானேம். எங்கள் நம்பி பசுக் கூட்டத்தை மீட்டுக் கோவிந்தையைப் பதுமுகனுக்குக் கலியாணம் செய்வித்தான். காந்தருவதத்தையை இசைப்போரில் வென்று மணந்தான், யானையை அடக்கிக் குணமாலையை மணந்தான். அவன் எங்கள் உயிர்த் தோழன்; அவன் பெயர் சீவகன். அவனைப்பெற்ற கந்துக்கடன் ஒரு நாள் கட்டியங்காரனுடைய குற்றத்தைக் கண்டும் சீவகனைப் போர் செய்ய ஒட்டாமல் அடக்கினன். அதனல் கட்டியங்காரன் சீவகனை நகரிலே கொல்ல......" என்று சொன்னவுடன், "ஆ" என்று கூறி விசயை கீழே வீழ்ந்து மூர்ச்சை யடைந்தாள். தோழர் அதைக் கண்டு வியப்புற்றனர்.

"இத்தேவியார், சீவகனுக்கு உற்றதுன்பத்தைக் கேட்டவுடன் 'தம் மகனுக்கு உற்ற துன்பம் போல் எண்ணி வருந்தி மூர்ச்சித்து விழுந்தாரே! ஆ! என்னே! இவர் மிகவும் அருளுடையவராயுள்ளார். இவ்வாறு அருளை உண்டாக்கிய தவப் பெருமையை என்ன என்று சொல்வது?" என்று கூறி அதிசயித்தனர். விசயையின் மூர்ச்சையை நீக்க எண்ணினர். குளிர்ந்த நீர் முதலியவற்றைக் கொணர்ந்து தெளித்து மூர்ச்சையைத் தெளிவித்தனர் மூர்ச்சை நீங்கியதும் கண்ணீர் பெருகி ஓட விசயை பொருமினள்.

"எம்மானே! அரசன் இறக்க எந்திரமயிலூர்ந்து சுடுகாட்டில் வீழ்ந்த எனக்குத் துணையாத் தோன்றினையே! நீயும் பிரிந்தனையே! கந்துக்கடன் எடுத்துச் சென்று சுநந்தையிடம் கொடுக்க, உவகையோடு வளர்த்த அவளும் வருந்தும்படி பிரிந்தனையே! என்னையா! என்னரசே! 'நீ உயிருடன் இருந்து உன் புதல்வனல் பகையை வெல்க' என்று என்னை வேந்தன் விடுத்தானே. மூன்று கனவில் முதற்கனவு பலித்ததே! மற்ற கனவிரண்டும் பயன் தருமென்று உயிரோடிருந்தேனே! நீ ஒரு குடைக்கீழ் உலகமெல்லாம் அரசாள யான் கண்டு மகிழ்ந்து பின்பு, 'இனி நீ துறந்து போ அம்ம' என்று நீ சொல்ல நான் போவேன் என்று இருந்தேனே! அதற்கு முன்

மகனே! குருகுலத்தாற் போரேறே! ஏமாங்கதத்தார் இறைவா! என் இன்னுயிரே! காமா! சீவகனுக்குத் தீங்கு இல்லை என்று இங்கு வந்தார் சொல்லக் கேட்டு மகிழ்ந்திருந்தேன்; கடலுள் கப்பல் கவிழ்ந்தது போலாயிற்றே! உன்னைப் பெற்றபின் மீண்டும் ஒரு முறை பார்க்க முடியாமல் செய்த தீவினை யாதோ? ஆ! என்னைப்போலப் பாவிகளான மகளிர் இனிமேல் பூமியில் தோன்ருதீர்'' என்று புலம்பி மீண்டும் பூமியில் விழுந்து பொருமினுள்.

விசையின் புலம்பலைக் கேட்டதும் தோழர் மனம் கலங்கினர். 'சச்சந்தன் மனைவியான விசயை என்பவளே இவள்' என்று உணர்ந்தனர். சீவகன் விசயையினுடைய மகன் என்று எண்ணி, எண்ணி மனம் குளிர்ந்தனர். சீவகன் தாய் உயிருடன் இருப்பதற்கு அவர்கள் அதிக மகிழ்ச்சி கொண்டனர். உவகையால் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டனர்.

"காரியம் முடிந்த விதத்தைப் பார்த்தீர்களா? கட்டியங்காரன் ஒரு பொருளோ! நாங்களே யமனுய்ச் சென்று அவன் உயிரை உண்போம். உலகைக் கைக்கொள்வோம்'' என்று கூறி தோழர் ஆரவாரித்தனர். விசயையை இனிய வார்த்தைகளால் தேற்றினர்.

"தேவி! சீவகனுக்குச் சாவு இல்லை; அவனைக் கொல்லக் கொலைக்களத்தை அடைந்தவுடன் ஒரு தெய்வம் அத்துன்பத்தை நீக்கியது. அவன் இராசமாபுரத்தை விட்டு ஏமமாபுரம் சென்ருன்; நாங்கள் அங்குச் செல்கின்ருேம்; உம்மை வணங்கிப் போக இங்கு வந்தோம். இப்போது, சீவகன் வணிகன் அல்லன்; அரசன் என்று அறிந்துகொண்டோம்'' என்று கூறினர். சீவகன் உயிரோடு இருக்கிருன் என்ற வார்த்தைகளால் விசயையின் உள்ளம் குளிர்ந்தது; உவகையால் உடல் பூரித்தாள்.

"வீரர்களே! சச்சந்தராஜன் என்னிடத்துக் காதலால் பூமியைக் காத்தலை விட்டு மந்திரியால் மாய்ந்தான். இரணியன் மந்திரியர் சொற்களைக் கேட்காமல், தன்னையன்றி வேறு கடவுள் இல்லை என்று கூறி உதவியின்றி மடிந்தான். அதுபோலவே, அரசனும், மந்திரியர் கூறிய புத்தியைக் கேட்காமல் கட்டியங்காரனுக்கு அரசைக் கொடுத்து அவனுல் மாய்ந்தான். அரசன் அடைந்த பின்பு யான் அடைந்த துன்பத்தையெல்லாம் சீவகனுக்குக் கூறுங்கள். பின்பு, சீவகனை வருந்ாதபடி விரைவில் என்னிடம் அழைத்து வாருங்கள். இந்தக் காரியத்தில் சீவகனையல்லாமல் பிறர்க்கு ஒன்றும் சொல்லாதீர்கள்; யாரையும் நம்பாதீர்கள்; அறியாதவரோடும் மகளிரோடும் பேசாதீர்கள்; பகைவர் மனம், பாம்பின் ஒட்டம், மகளிர் மனம் என்ற மூன்றும் ஒரு நிலையில் நிற்பன அல்ல. ஆதலால் உள்ளத்தையும் பேச்சையும் பாதுகாத்துக்கொள்ளுங்கள்'' என்று விசயை கூறினுள்.

"தேவி! இன்னும் ஒரு மாதத்திற்குள் தங்கள் திருவடியைச் சீவகன் சேரும்படி அழைத்து வருவோம்; பின்பு, பகையை வெல்வோம்'' என்று கூறி விசயையின் பாதத்தை வணங்கித் தோழர் புறப்பட்டனர்.

குதிரைப் படைகள் பேராரவாரமுடன் கிளம்பின: தோழர் நால்வரும் குதிரைகள் மீது ஏறி விரைந்து சென்றனர். மனோவேக வாயுவேகமாய் மலைகளையும், காடுகளையும் விரைவிற் கடந்து சென்ருர்கள். ஏமமாபுரத்திற்கு நான்கு காத தூரத்தில் உள்ள நதிக்கரையை அடைந்தனர். அருகில், ஆறும் சோலையும் இருப்பதைக் கண்டு அங்கே இறங்கித் தங்கினர். அவ்விடம் ஏமமாபுரத்தின் எல்லை என்பதை வழிப்போக்கரால் அறிந்து அகமகிழ்ந்தனர். எல்லாரும் சிறிது இளைப்பாறிய பின், சோலை நடுவே உள்ள மணல் திட்டில் தோழர் நால்வரும் அமர்ந்து 'சீவகனை எப்படிக் காண்பது?' என்று ஆலோசித்தனர்.

அடுத்த வாரம் :

சீவகனும் தோழரும்

ஒவ்வொருவருக்கும் இடமிருக்கிறது.

பணம் சேமிப்பதற்காக நீங்கள் இதுவரை ஜாக்கிரதையுடன் போட்டிருந்த திட்டங்களெல்லாம் தவறிப் போயிருப்பினும் பாதகமில்லை.

இன்னும் பத்து அல்லது பதினைந்து வருஷ காலம் சம்பாதிக்கும் சக்தியுள்ள ஒவ்வொருவரும் தள்ளாத காலத்தில் ஆதரவற்றிருக்க நேரிடுமோ என்னும் பயத்தை உதறித் தள்ளிவிடலாம். இதற்கு அவருடைய வருமானம் அதிகமாக இருக்க வேண்டுமென்பதில்லை. வருவாய் சொல்பமாய் இருந்தால்கூட வாழ்க்கையில் பணக்கஷ்டமின்றி இருக்கலாம். எங்கள் பாலிஸிகள் இந்த உண்மையை உங்களுக்கு நிருபிக்கும்.

இந்தியாவில் ராணுவ உத்தியோகங்களில் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் எங்கள் பாலிஸிகள் வழங்கப்பட்ட நிமிஷத்திலிருந்தே யுத்தத்தினுல் ஏற்படும் விபத்துகளுக்கும் இதர விபத்துகளுக்கும் நஷ்ட ஈடு அளிக்கின்றன. இதற்காக அதிகப்படி செலவு கிடையாது.

யுனைடெட் இந்தியா
பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்.
'யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்'
எஸ்ப்ளனேட் மதராஸ்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும், 25, 50, 100 கொண்ட புட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES
ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

காலத்திற்குத் தக்க கோலம்

★

ஸ்ரீ வி. ஸி. கோபாலரத்னம்

காலத்தை அனுஸரித்து நடப்பது என்பது வாயால் சொல்வதற்கு ரொம்ப சுலபம்; நடவடிக்கையிலே மகா கஷ்டம்! லோகத்திலே மனுஷ்யர்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களுக்கும், உபத்ரவங்களுக்கும் அநேகமாய் இதுதான் காரணம். தகப்பன் பிள்ளைக்குள்ளே தகராறு: அண்ணன் தம்பிக்குள்ளே அடிதடி; புருஷன் பெண்டாட்டிக்குள்ளே பிணக்கம், — இவைகளுக்கெல்லாம் காரணங்களைத் தேடிப் பார்த்தால், இதுதான் இருக்கும். கடைசியிலே பார்க்கப்போனுல், யார் வீட்டு சொத்தையும் யாரும் தூக்கிக்கொண்டு போய்விடுவதில்லை. காலத்துக்குத்தக்க போக்கை அனுஸரிக்காமல் எதையாவது செய்தோ, சொல்லியோ, மற்றவர் மனஸைப் புண்படுத்திவிட்டுத் தானும் கஷ்டப்பட்டு தவிக்கிறது; இதுவே நம் கண்களுக்கு முன்னே பிரதி தினமும் நடக்கிறது.

மனுஷ்ய ஜன்மத்துக்கே பிடிவாதமும் முரட்டுத்தனமும் கூடப்பிறந்தவை மாதிரி! தான் பிடித்த பிடியை விட்டுவிட எவரும் சுலபமாக சம்மதிக்கமாட்டார். காலப்போக்குக்கு விரோதமாய், தன் பிடிவாதம் ஒன்றையும் சாதிக்கமுடியாது என்கிற விஷயத்தை கடைசியிலே தெரிந்துகொள்கின்றனர். அதுவரையிலும் நஷ்டம், மனக் கஷ்டம், எல்லாம் ஏராளமாய் அவர்கள் பங்குதான்.

இல்லாவிட்டால் பாருங்கள்! அச்சு பிச்சு ஐயங்கார் அந்தி வேளையிலே உட்கார்ந்து அழுதுகொண்டு இருந்தார். அவர் ஒரு அட்வகேட்!

"ஆமாம் ஸார், அட்வகேட்டா இருந்தால் அதற்காக அழுவானேன்?'' என்று கேட்கிறீர்களா?

அதற்காக அழுதுகொண்டு இருந்தார் என்று நான் சொல்ல வரவில்லை; ஆனுல் அட்வகேட் பிழைப்பு இன்றைக்கு இருக்கிற அழகுக்கு அழவும் அழலாம், அடிச்சுண்டும் அழலாம். ஸரி! ஸரி! இப்போ அதைப்பற்றி பேச நான் இங்கே வரவில்லை நான் என்ன சொல்லிக்கொண்டு இருந்தேன்? ஊம்...அச்சு பிச்சு ஐயங்கார் அந்தி வேளையிலே அழுதுகொண்டு இருந்தார்.

"என்னய்யா ஓமக்கு வந்துவிட்டது?'' என்று கேட்டேன்.

"நாளைக்கு எங்கப்பா ஸ்ராத்தம்......''என்று ஆரம்பித்தார்.

"அட, ராமா, ஓங்கப்பா போயி முப்பது வருஷமாறதே, அதை நினைச்சுண்டா இப்போ அழறீர்?'' என்று கேட்டேன்.

"இல்லே ஸார். ஓங்களுக்கு எப்பவும் விளையாட்டுதான் ஸார்! பாருங்கோ, எனக்கிருக்கிறதெல்லாம் ஹைகோர்ட்டுலே ஒரே ஒரு கேஸ். இருந்த நாளையெல்லாம் விட்டுட்டு, அதை நாளைக்கு விசாரணைக்குப் போட்டிருக்கு: ஸ்ரார்த்தம் முடிய மணி மூணுகும். நான் சாப்பிட்டு எழுந்திருக்க நாலாகும். ஆகையினுலே இன்னிக்கே போயி ஜட்ஜுகளை ஸ்ராத்தம் ரொம்ப முக்கியமானதுன்னு சொல்லி கேஸை வாய்தா போடும்படி கேட்டுண்டேன். எதிர் தரப்பிலே வக்கீல் ஒரு ஸாயபு. அவன் கொஞ்சம்கூட ஆக்ஷேபிக்காமெ ஸரின்னு சொன்னுன். வெள்ளைக்கார ஜட்ஜு 'ரொம்பஸரி' இன்னுவாயெடுத்தான். உடனே பக்கத்துலே ஒக்காந்திருந்த மத்தொரு ஜட்ஜு— பிராமணன் ஸார்—அவன் காதைக்கடிச்சார். சரி, ஸ்ராத்தத்தை 12 மணிக்குள்ளே முடிச்சுட்டு சீக்கிரமா வந்துடுங்கோன்னு உத்தரவு போட்டா அது எப்படி முடியும்? சி.சி,சி,சி,! என்ன காலம் ஸார்! எங்க குடும்பத்துலே இதுவரைக்கும் நாங்க ஒரு தர்ப்பணத்தைகூட ஒடுக்கி சேஞ்சதில்லே...'' என்று ரொம்ப வருத்தப்பட்டார்.

நான் எவ்வளவோ சொன்னேன்..." ஒன்பது மணிக்கெல்லாம் ஆரம்பிச்சு முடிச்சுடலாம். கேஸை விட்டுடாதிங்கோ'' என்று கதறினேன். ஆனுல் அவர் பிடித்தபிடியே தான்! கேஸ்கட்டை வேறொரு வக்கீலிடம் அனுப்பிவிட்டு, தர்ப்பை கட்டை கெட்டியாய் பிடித்துகொண்டுவிட்டார். மூன்றரை மணிக்கு தெவஸத்தை முடித்துவிட்டு, மூக்கு பிடிக்க சாப்பிட்டெழுந்தார். இருந்த ஒரு கக்ஷிக்காரனும் பக்ஷியாட்டமா பறந்து போய்விட்டான்! ஐயங்காருக்கு குக்ஷி விசாரம் குறையாத விசாரமாப்போச்சு, பாவம்!

கம்பெனி சொந்தக்காரர்—அவரும் பிராமணர் தான், — பையனுக்குத் தன் பெண்ணையும் கொடுத்து, சீமைக்கும் அனுப்பி திரும்பிவந்ததும் கம்பெனியிலேயே 500 ரூபா சம்பளத்திலே ஆரம்பிக்கிறதாகச் சொல்லியனுப்பினுர். பையனுக்கு இதை எப்படியும் விடக்கூடதென்று ஆசை. தகப்பனுரோ ஒரே அடியாய் ஓங்கி அடித்துவிட்டார், "நான் வடமன்! பிரஹசரணத்தான் பொண்ணை வாங்கிக்கறதாவது'' என்று கத்தினுர். "சீமைக்கு போகவேணும். போய்த் தொலைஞ்சு, எவளாவது ஒரு சினிமாக்காரியைப் பிடிச்சு இழுத்துண்டு வரவும் வேணும்!'' என்று சீறினுர்.

இதைப்பற்றி தினம் ஒரு தடவை அப்பாவுக்கும் பிள்ளைக்கும் அம்மாவுக்கும் திரிகோண யுத்தம்! தன் பிள்ளை பெரிய டாக்டராக வேண்டும்: ஏராளமாக சம்பாதிக்க வேண்டும் என்று ஐயருக்கு ஆசை. அவனை மெடிகல் காலேஜுக்கு அனுப்பினுர். முதல் இரண்டு நாள் காலேஜிலிருந்து வந்ததும் பையன் ஒரே பிடிவாதமாகத் தலையை 'க்ராப்' செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டான். மற்ற பையன்களெல்லாம், தன்னை ரொம்ப கேலி பண்ணுவதாகச் சொன்னுன். ஆனுல் தகப்பனுருக்கு சம்மதமே இல்லை. "ரொம்ப அழகா இருக்கு. லக்ஷணமா குடுமியை முடிஞ்சுண்டு தலைப்பாகை போட்டுண்டு போடா! க்ராப் பண்ணிண்டு தொரை வீட்டு பட்லராட்டமா தரிசனம் கொடுக்க வேணும்'' என்று குமறினுர்.

பையனுக்கு ஸதா முணுமுணுப்புதான்! இதைக்குறித்து தினமும் ஒரு சின்ன போராட்டம். ஒரு மாதம் கழித்து ஒரு நாள் பையன் தலையை நன்றாய் அழகாகக் கத்தரித்துக்கொண்டு, வாரி, வகுடு எடுத்துக்கொண்டு வந்து நின்ருன். தகப்பனுருக்கு நரசிம்ம அவதாரம் மாதிரி ஏற்பட்டு 'நற நற'ன்னு பல்லைக் கடித்தார். பையன் அழுதுகொண்டே, "வந்த பசங்களெல்லாம் என்னை காலையும் கையும் சேத்துப் பிடிச்சுண்டு, கட்டாயமா கத்திரி எடுத்து தலைமயிரைத் தாறுமாரு கத்திரிச்சுட்டா'' என்று சொன்னுன். அதற்கு மேலே விதியே என்று க்ராப் பண்ணிக்க வேண்டி வந்ததாம், பாவம்! நல்ல வேளை, பையனுக்கு மாமா குறுக்கே வந்து அடி விழாமல் காப்பாற்றினுர். ஆனுல் அன்றிலிருந்து பையன் தன்னோடு கூட உட்கார்ந்து சாப்பிடக்கூடாதென்று ஐயர் உத்தரவு; ரொம்ப அழகாயில்லை?

"பையன் காலேஜுக்கு வேஷ்டி உடுத்திக்கொண்டுதான் போகணும். ஸுட் தெச்சு கொடுக்கமாட்டேன்'' என்று தகப்பனுர் கண்டிப்பாக மறுத்து விட்டார். ஆனுல் மாமா நல்ல உயர்ந்த ரகமான துணியிலே நாலு ஸுட்டுகள் தைத்துக் கொடுத்தார். அதைப்போட்டுக்கொண்டு முதல் நாள் பிள்ளையாண்டான் காலேஜுக்குப்போய் ரொம்ப குஷியாய் ஆத்துக்கு வந்து, அம்மா மாமா ஆகியோரிடம் தான் காலேஜிலே செய்ததையெல்லாம் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தான். மனுஷ்யன் மூளையை எடுத்து அறுத்துப் பார்த்து, அதன் மர்மத்தையெல்லாம் தெரிந்துவிட்டதாகச் சொன்னுன். அதைக்கேட்டுக்கொண்டே ஆஷாடபூதி ஐயர் வந்தார். "யார் மூளையை அறுத்தேடா? மயக்கம் கொடுத்தயோ இல்லையோ?'' என்று கேட்டார். "மயக்கம் ஏதுக்கப்பா? செத்துப்போனவன் மூளைதானே.'' என்று பையன் சிரித்துக்கொண்டே பதில் சொன்னுன். ஐயர் ஒரு தாவு தாவினுர். பையனைக் கையைப் பிடித்து 'கர கர' வென்று இழுத்துக்கொண்டு குளத்தங்கரைக்குப் போனுர்! "அசம்பாவிதம்! செத்த பொணத்தைத் தொட்டு அறுத்துட்டு, சாவு தீட்டோட வீட்டுக்குள்ளே வந்து தீட்டை கலக்கிருயா? அயோக்யா!'' என்று தாறுமாருகத் திட்டிக்கொண்டே, குடம் தண்ணீரைத் தூக்கி அவன் தலையிலேயும் தன் தலையிலும் கொட்டிக்கொண்டு போய்ச்சேர்ந்தார். பையன் போட்டுக்கொண்டிருந்த உடுப்பு மொத்தமும் குட்டிச்சுவராய்ப் போய் குப்பையிலே போடவேண்டி வந்தது. அன்றைக்கே பையனை ஹாஸ்டலுக்கு அனுப்பிவிட்டார், வீட்டிலே ஒரு விதத் தீட்டும் கூடாதென்று. பலன் என்ன? இயற்கையா பரம யோக்யனுன பையன்—நல்ல சுத்தமான மனசு. குணம் எல்லாம் இருந்தவன்-கெட்டவழிகளெல்லாம் கற்றுக்கொண்டான். சுருட்டு, குடி, குதிரைப் பந்தயம், பொய் எல்லா வித்தைகளையும் கற்றுக்கொண்டான். தகப்பனுருக்கும் பிள்ளைக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. விட்டிலே பிள்ளையைக் குறித்து அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சதா சண்டை. இந்த கட்டுப்பெட்டி ஆஸாமிக்கு ஏன் இவ்வளவு பிடிவாதம்? காலத்தை அநுஸரித்து கொஞ்சம் போனுல்தான் என்ன கெட்டுப்போச்சு அவருக்கு?

ஆஷாடபூதி ஐயர் அட்டஹாஸம்

அடுத்தாத்து ஆஷாடபூதி ஐயர் அதேமாதிரித்தான். கொஞ்சங்கூட லௌகீகம் தெரியாத மனுஷன். அவருக்கு ஒரே பிள்ளை. நல்ல புத்திசாலி. கண்ணுக்கு லக்ஷணமாக இருப்பான். ஆனுல் காலையில் எழுந்தால் போது போகிற வரைக்கும் ஆஷாடபூதி ஐயருக்கு அவனை ஹிம்ஸை பண்ணுவதைத் தவிர வேறு வேலை கிடையாது. இண்டர்மீடியட் பரீக்ஷையிலே எல்லாருக்கும் மேலாக முதல் வகுப்பிலே முதலாகப் பாஸ் பண்ணினுன் ... உடனே ஒரு பெரிய

அச்சு பிச்சு ஐயங்காரும் ஆஷாடபூதி ஐயரும் நம்மோடு இருந்தால் நாம் சிரிக்காமல் வேறு எதைத்தான் செய்ய முடியும்? ஸ்ரீமான் வி. ஸி. கோபாலரத்னத்துடன் சேர்ந்து நாமும் ஆனந்தமாக அட்டஹாஸம் பூராவையும் அனுபவிப்போம்.

"பெண்ணே நேரில் வருகிருள்"

பெண் பசங்களை வளர்ப்பதில் ஏதாவது கஷ்டம்

—(அடுத்த பக்கம் பார்க்க)

காலத்திற்குத் தக்க கோலம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

குறைச்சலா இந்தக் காலத்தில்! பழைய காலத்திலே, ஏதோ பத்து வயசு வரைக்கும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி, யாரையாவது நல்ல குடியிலே பிறந்த ஒரு பையனைப்பார்த்து கல்யாணம் பண்ணிக்கொடுத்துவிட்டால் பாதி பாரம் நீங்கினாற்போல்! ஆனால் இந்த காலத்திலேயோ, அப்பப்பா, முதலில் ஸர்க்கார் காரரே ஒரு சட்டத்தைப் பிறப்பித்து 14-வயது முடிவதற்கு முன்பு பெண்களுக்குக் கல்யாணம் செய்கிறவர்களைத் தண்டிக்கப்படும் என்று அமுலுக்குக்கொண்டு வந்து விட்டனர். ஸரி, சில பேருக்கு இதற்குக்கூட பயம் இல்லை. ஆனால் கல்யாணப் பேச்சை எடுத்தால் பெண்ணே நேரில் வருகிறாள்: "எனக்கு இப்ப வேண்டாம்பா! படிப்பு கெட்டுபோயிடும்பா;" என்கிறாள். இல்லாவிட்டால் தான் யாரோ ஒரு பையன் மேலே காதலில் விழுந்து விட்டதாகவும், வேறு ஒருவனை கண்ணெடுத்துப் பார்க்கவும் முடியாது என்றும் சொல்லிவிடுகிறாள். அவள் விழுந்த இடம்—அது தான் காதலில் விழுந்துவிட்ட இடம்—ஸ்வஜாதியாக இருந்தால், ஏதோ நாம் பண்ண பெரிய புண்ணியம். ஆனால் வேறு எந்த மாதிரியாகத்தான் விபரீதமாய் இருந்தாலும் நம்மால் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை. பகவானே என்று அவர்கள் போகிற வழியே விட்டோமானால் பிழைத்தோம். இல்லாவிட்டால் 'ஸோஷல்ரிபார்ம் மாரியேஜ்" "ரிஜிஸ்டர் மாரியேஜ்" இருக்கவே இருக்கின்றன.

பசங்கள் கிடக்கட்டும். அநேக பிராமணர் வீடுகளிலே இப்போது 35, 40 வயது பொம்மனாட்டிகள் கூட லக்ஷணமாய் மாம்பழக் கட்டுக் கட்டிக்கொண்டு 'மழ மழ'ன்னு வளைய வரா. மடிஸார் கட்டு மலையேறிப் போயே போச்சு...இவாளை ஏதாவது குற்றம் சொல்லமுடியுமா? இல்லை. இதனாலே இவர்களை ஜாதி ப்ரஷ்டம் பண்ண வேண்டியதென்று ஏதாவது ஒரு அசத்து உளறினால் அதைக் கேட்டு நாலு பேர் சிரித்துவிட்டு போவார்கள். உடுப்பிலே என்ன இருக்கிறது? உள் சுத்தம் வேணும் ஸார். ஏன்?

இதே மாதிரிதான், இந்த காலத்திலே யாராவது பெண்ணுக்கோ, பிள்ளைக்கோ ஐந்து நாள் கல்யாணம் பண்ண வேண்டும் என்று சொன்னால், அது கொஞ்சம் ஆச்சரியமாத்தான் இருக்கும். ஹும்! ஹும்! சர்க்கரை அகப்படுவது அகப்படவில்லை; அது ஒரு பக்கம் இருக்கட்டும். மொத்தத்திலே எவ்வளவோ விதத்திலே ஒரு நாள் கல்யாணம் சுலபம். இருந்தாலும் அநேக வீடுகளிலே இதைக் குறித்து எவ்வளவோ அபிப்ராய பேதங்கள், மனஸ்தாபங்கள் ஏராளமாக இருக்கின்றன.

"இந்தக் காலத்தில் பயம் ஏது?"

முன் நாளில் கடன் வாங்கினவன், கடன் கொடுத்தவனைக் கண்டால் பயப்படுவான். அவன் மிரட்டினால் பயப்படுவான். காலை கையைப் பிடிப்பான்......கஷ்டப்பட்டாவது கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கொடுத்து விடுவான். இந்த காலத்திலேயா கடன் வாங்கினவன், காலையும் பிடிக்கவேண்டாம்; கையையும் பிடிக்க வேண்டாம்; கழுத்தைப் பிடிக்காமல் இருந்தால் போதும்! கடன் கொடுத்தவன் ரொம்ப பவ்யமாய் "எங்கேப்பா பணம் பாக்கியாச்சே?" என்று கேட்கிறான். வாங்கினவனுக்கு ருத்ராகாரமாய் கோபம் வந்து விடுகிறது. "என்னப்பா! மகா கடன் குடுத்திட்டயோ? கோர்ட்டுலெ தானே போடுவே! போடு! போடு தாராளமா! ஒனக்கிருக்கிற சட்டமும் வக்கீலும் எனக்கும் உண்டு, தெரியுமா? மகராஜாவெல்லாம் மஞ்சைக் கடிதாசி கொடுத்துடராளாம். எனக்கென்னடா வந்தது?" என்று கேட்கிறான். அவனை மிரட்டினால் கடன் தொகையைத் திரும்பிப் பார்ப்பது குதிரைக் கொம்பு தான். அவனைத் தட்டிக் கொடுத்து, அப்போதைக் கப்போது ஹோட்டலுக்கு அழைத்துக்கொண்டு போய், கைச் செலவுக்குக் கொடுத்துக் கொண்டு வந்தால், ஏதாவது கொடுத்த பணத்திலே கொஞ்சமாவது திரும்பி வரும். இல்லாவிட்டால் கோர்ட்டு டிக்கிரியை வாங்கிக் கொண்டு "கோத்தி"யாட்டம் இளித்துக் கொண்டு இருக்க வேண்டியது தான்! என்ன? ஸிவில் ஜெயிலா? உரக்கச் சொல்லாதீர்கள்! கேட்டால் சிரிக்கப் போகிறார்கள்! இந்த காலத்திலே கிரிமினல் ஜெயிலே மாமியாரகம் மாதிரி நினைத்திருக்கையில், உமது ஸிவில் ஜெயிலுக்கு யார் பயப்படுவார் காணும்? என்ன காலம் கலியா? ஆமாம்; அதைத்தான் சொல்கிறேன். அதை அனுசரித்துப் போகிறவன் தான் புத்திசாலி.

(சென்னை ரேடியோ மூலம் 8-ம் தேதி ஒலி பரப்பப்பட்ட பிரசங்கம்)

சித்திரமும் சிருங்காரமும்

ஜோன் க்ராபோர்ட்

ஜோன் க்ராபோர்ட் மெட்ரோ ஸ்டூடியோவின் அனுமதியுடன் கொலம்பியாவுக்குப் புறப்பட்டு போயிருக்கிறாள்.

"அவன் தன் மனைவிக்கு முத்தமிட்டான்" என்ற படத்தில் அகால மரணமுற்ற கரால் லாம்பார்டுக்குப் பதிலாக ஜோன் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறாள்.

இது தவிர, ஜோன் செய்திருக்கும் ஒரு காரியம் அவளது மஹத்தான தர்ம சிந்தனையை எடுத்துக்காட்டுகிறது. தனக்குக் கிடைக்கும் சம்பளமான 28000 பவுன் பூராவையும் தர்மத்திற்காகச் செலவழிக்கும்படி அவள் அமெரிக்க ஸர்க்காருடன் ஒரு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாள்.

ஹாலிவுட்டில் யுத்த சேவையில் ஈடுபட்டிருப்பவர்களது குழந்தைகளின் ரக்ஷணத்திற்காக ஒரு விடுதியை ஸ்தாபித்து நடத்திவருகிறாள் ஜோன்.

* * * *

திரும்பவும் ஸங்கீதப்படம்

ஹாலிவுட்டில் மறுபடியும் ஸங்கீதம் நிறைந்த படத்திலேயே ஆசை அதிகரித்து வருகிறது. இது முன்னமே எதிர்பார்க்கப்பட்டதுதான். எந்தந்த படத்திற்கு நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது என்பதைக்கண்டு பிடிப்பதிலேயே ஹாலிவுட் ஸினிமாக்காரர்கள் கவலை காட்டி வருகின்றனர்,

இதுவரை வந்திருப்பதைக் காட்டிலும் இந்த வருஷம் அதிகமான ஸங்கீதப்படங்கள் தயாராகும் என்று கூறப்படுகிறது. படம் தயாரிப்பவர்கள் உல்லாஸமானபொழுது போக்குப் படங்களைத்தான் பொதுமக்கள் ரஸிக்கின்றனர் என்பதை அறிந்து வருகின்றனர். ஆகவே அதற்காக அவர்கள் அதிகம் செலவு பண்ணவும் தயாராக இருந்து வருகின்றனர்.

"லூயிஸியானா பர்சேஸ்" என்ற படத்திற்கப்புறம் பாரமவுண்ட் கம்பெனியார், அதே மாதிரி மேலும் பலபடங்களைப் பிடிப்பதில் சிரத்தை கொண்டு வருகின்றனர். டராத்தி லாமூர் நடிக்கும் "தி ப்ளீட் இஸ் இன்" என்ற படமும் வெளிவந்து விட்டது. இர்விங், பெர்லின், பிங், க்ராஸ்பி, ப்ரெட் அஸ்டேர் முதலிய பலர் நடிக்கும் "ஹாலிடே இன்" என்ற படத்திலும் ஸங்கீதத்திற்குத்தான் முக்கிய ஸ்தானம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

"தி லேடி இன் தி டார்க்" என்ற படத்தில் ஜிஞ்ஜர் ரோஜர்ஸையும் ப்ரெட் அஸ்டேரையும் ஒன்றாக நடிக்க வைக்கப் பிரயத்தினம் நடந்து வருகிறது.

பாரமவுண்ட் கம்பெனியில் நன்கு பாடக்கூடிய நடிகர்கள் பலர் இருக்கின்றனர்; விரா ஸரினா, விக்டர் மூர், ஜூடிகனேவ, ஆஸ்கர் லிவாண்ட், வர்ஜினியாடேல்,

* * * *

இங்க்ரிட் பெர்க்மன்

"அவள் அழகாக நடக்கிறாள்" என்ற ஸெல்ஸ்னிக் படத்தில் இங்க்ரிட் பெர்க்மன் நடிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தப்படம் ஹென்ரி ஜேம்ஸ் என்பவர் எழுதிய பிரபல நவீனத்தை அடிப்படையாகக்கொண்டது. "டாக்டர் ஜெக்கிள் அண்ட் மிஸ்டர் ஹைட்" என்ற படத்திற்குப் பிறகு இங்க்ரிட் நடிப்பது இந்தப் படத்தில்தான்.

* * * * *

புது மெட்ரோ ஜோடி

மெட்ரோ கோல்ட்வின் மேயர் தயாரிக்கும் "தி ராண்டம் ஹார்வெஸ்ட்" என்ற படத்தில் ரோனால்ட் கோல்மனும் க்ரீர் கார்ஸனும் நடிக்கின்றனர்.

ஜேம்ஸ் ஹில்டன் என்பவர் எழுதிய நவீனம் தான் படம் பிடிக்கப்படுகிறது. இதற்கப்புறம் "மிஸஸ் மின்னிவர்" என்ற படம் வெளிவரும். இதில் க்ரீர் கார்ஸன் வால்டர் பிட்ஜடனுடன் நடிக்கிறார். "மண்ணில் மலர்ந்த புஷ்பங்கள்" என்ற படத்தில் இவ்விருவரும் சிறப்பாக ஏற்கெனவே நடித்திருக்கின்றனர்.

குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளுக்கு
பிரபல டாக்டர்கள் ஜம்மி வெங்கட்டரமணய்யாவின் "லிவர்க்யூரை"யே சிபார்சு செய்கிறார்கள்
ஜம்மி'ஸ் லிவர் க்யூர்
போலிகளைக் கண்டு மோசம் போகாதீர்கள்
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

யுவதியின் சபதம்

ஸ்ரீ ப்ரேம் சந்த் எழுதியது

(சென்றவாரத் தொடர்ச்சி)

3

பல மாதங்கள் கழிந்தன. ராஜகுமாரிகள் இருவரும் வஜ்ர விலாஸினியின் கதையைக் கேட்டதிலிருந்து அவளிடம் அதிகமாக அன்பு காட்டினார்கள், முதலில் அவர்கள் சில சமயம் அவளை வெறுத்ததுண்டு. ஆனால் இப்பொழுது அவளை விட்டுப் பிரிவதேயில்லை. ஒரு நாள் மேகம் இருண்டுகொண்டிருந்தது: ராஜ நந்தினி துர்கா குமாரியைப் பார்த்து "இன்று பிஹாரிலர்லின் ஸமஸ்யைக் கேட்க ஆவலாகயிருக்கிறது, அதில் நல்ல விஷயங்கள் இருக்கின்றன" என்றாள்,

"நல்ல புஸ்தகம் தான்-விலாஸினி, உன் பக்கத்திலிருக்கும் அலமாரியில் அந்தப் புஸ்தகம் இருக்கிறது. அதைக் கொஞ்சம் எடேன்" என்றாள் துர்கா குமாரி.

வஜ்ர விலாஸினி அலமாரியிலிருந்து புஸ்தகத்தை எடுத்து முதல் பக்கத்தைப் பிரித்துப் பார்த்தாள். சட்டென்று திடுக்கிட்டு புஸ்தகத்தை கீழே நழுவ விட்டுவிட்டாள். அதன் முதல் பக்கத்தில் ஒரு சித்திரமிருந்தது. அது அவள் தகப்பனாரையும் பசுவையும் கொலை செய்தவருடையது. வஜ்ர விலாஸினியின், கண்கள் சிவந்தன. பழய பிரதிக்ஞையின் நினைவு வந்தது. அதனுடனேயே இந்த மனிதனின் படம் இங்கு எப்படி வந்தது? அவனுக்கும் இந்த ராஜகுமாரிகளுக்கும் என்ன சம்பந்தம்? அப்படி ஏதாவது இருந்தால் என் சபதத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்' என்று நினைத்தாள்.

ராஜநந்தினி அவள் முகத்தைப் பார்த்து" என்ன சமாசாரம்? இந்தக் கோபம் எதனால் ஏற்பட்டது?" என்று கேட்டாள்,

வஜ்ரவிலாஸினி மெதுவாக "ஒன்றுமில்லை. எதனாலோ மயக்கம் வந்து விட்டது" என்றாள்.

அன்றிலிருந்து வஜ்ரவிலாஸினியின் மனதில் வேறொரு கவலையும் உற்பத்தியாகியது. ராஜகுமாரிகளின் அன்பிற்காகத் தன் பிரதிக்ஞையை விட்டுவிடுவதா என்ற கேள்வி அவள் மனதில் அடிக்கடி தோன்றிக்கொண்டிருந்தது.

பூராவாகப் பதினான்கு மாதங்கள் கழிந்த பிறகு ஆப்கானிஸ்தானத்திலிருந்து பிருதிவி சிங்கும் தர்ம சிங்கும் திரும்பி வந்தார்கள். பாதுஷாவின் சேனைகளுடன் போராட நேர்ந்தது. பனி அதிகமா யிருந்தது. மலைகளில் பனிக்கட்டிகள் ஏற்படலாயிற்று. போக்கு வரவு வழி அடைபட்டது. சாமான்கள் கிடைப்பது கஷ்டமாகி விட்டது. சிப்பாய்கள் பசியால் இறக்க வேண்டியிருந்தது. அப்பொழுது ஆப்கானியர்கள் சமயத்தை நழுவவிடாமல் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். கடைசியாக எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு திரும்ப நேரிட்டது.

இரண்டு ராஜ குமாரர்களும் ஜோத்பூருக்கருகில் வந்தார்கள். அவர்கள் மனதில் பலவிதக் கவலைகள் இருந்தன. அவ்வளவு நாட்களுக்குப் பிறகு யுத்த களத்திலிருந்து அப்பொழுது தான் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். காதலியைச் சந்திக்கும் ஆவல் அதிகரித்தது. இருவரும் வேறு ஏதோ கவலையிலும் ஆழ்ந்திருந்தார்கள். ஆனால் காதலியைச் சந்திக்கப்போவதை எண்ணி மனதைச் சாந்தப்படுத்திக்கொண்டார்கள். பிருதிவிசிங் துர்கா குமாரிக்காக ஆப்கானி தேசத்திலிருந்து ஒரு கூறிய கத்தியையும், தர்மசிங் ராஜ நந்தினிக்காக காஷ்மீரத்தின் சால்வைகளில் இரண்டையும் வாங்கிக்கொண்டு வந்தார்கள். இருவருடைய மனதும் சந்தோஷத்தால் பூரித்தன.

ராஜகுமாரிகள் இருவரும் தங்கள் கணவன்மார்கள் திரும்பி வருவதைக் கேட்டு உள்ளம் பூரித்தார்கள். தலை வாரி, அலங்கரித்து, நகைகளைப் போட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய முகம் ஆனந்தத்தால் பிரகாசமடைந்தது. அவ்வளவு நாட்களுக்குப் பிறகு கணவன்மார்களைச் சந்திக்கப்போவதை நினைத்து எல்லையற்ற ஆனந்தம் அடைந்தார்கள்.

மொழிபெயர்த்தவர் வெங்கடேசன்

மார்கழி மாதம். ஆல மரம் துளிர் விடலாயிற்று. ஜோத்பூரிலிருந்து தர்ம சிங்கும் பிருதிவி சிங்கும் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு ஜனங்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவர்கள் ஆப்கானி ஸ்தானத்திலிருந்து வெற்றியுடன் திரும்பி வந்ததற்காக இரு ராஜ குமாரிகளும் ஆரத்தியை வைத்துக் கொண்டு அரண்மனை வாசலிலேயே காத்திருந்தார்கள். பிருதிவி சிங், ராணுவ உத்தியோகஸ்தர்களும், மற்றுமுள்ள பிரமுகர்களும் புடைசூழ மஹாலில் நுழைந்தான். தர்மசிங்கும் தன் மஹாலில் நுழைந்தான். ஆனால் உள்ளே காலெடுத்து வைக்கும் போதே தும்பல் வந்தது. ராஜ நந்தினி ஆரத்தித் தட்டை எடுத்துக்கொண்டு முன்னே வந்தாள். ஆனால் கை நழுவி ஆரத்தித் தட்டு கீழே விழுந்து விட்டது. தர்மசிங்கின் மனம் 'பட பட' வென்று அடித்துக் கொண்டது. ராஜநந்தினியின் முகம் வெளுத்து விட்டது.

வஜ்ரவிலாஸினி இரு ராஜகுமாரர்களுக்கும் வரவேற்புப் பத்திரம் அளிக்கத் தயார் செய்து வைத்திருந்தாள். காலை ஆகாரத்தை முடிக்க பிருதிவிசிங் உட்கார்ந்தவுடன் வஜ்ர விலாஸினி அவன் எதிரில் வந்து வரவேற்புப் பத்திரத்தை அருகில் வைத்தாள். பிருதிவி சிங் அதை அன்புடன் ஏற்றுகொண்டான். பத்திரம் அவ்வளவு மேன்மையாக இல்லை; ஆனாலும் அதில் வீரப் பிரதாபங்கள் நிறைந்திருந்தன. அவன் வீர ரஸத்தின் காதலன். அதனால் அதைப் படித்த அவளுக்கு ஒரு முத்துமாலையைப் பரிசளித்தான்.

வஜ்ரவிலாஸினி அங்கிருந்து தர்ம சிங் இருக்கு மிடத்திற்குப் போனாள். அவன் உட்கார்ந்து கொண்டு சண்டையில் நடந்த விஷயங்களை ராஜ நந்தினிக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். வஜ்ரவிலாஸினியின் பார்வை அவன் மேல் விழுந்ததும் அவள் எதனாலோ சற்று பின்னடைந்தாள். அவளைப் பார்த்த பிருதிவி சிங்கின் முகமும் வெளுத்து விட்டது. உதடுகள் சாய்ந்தன, கைகால்கள் நடுக்கம் எடுத்தன. வஜ்ரவிலாஸினி சட்டென்று திரும்பினாள். தர்ம சிங் கட்டிலில் படுத்து கைகளால் முகத்தை மூடிக் கொண்டான், ராஜ நந்தினி அவைகளைப் பார்த்தவுடன் அவள் ஆடைகள் எல்லாம் வியர்வையால் நனைந்தன. தர்ம சிங் நாள் பூராவும் மௌனமாகக் கட்டிலின் மீதே படுத்திருந்தான். அவனுடைய முகம் பல நாள் வியாதியால் அடிபட்டவனுடையதைப் போலாகி விட்டது. பகல் அம்மாதிரி கழிந்தது. ராஜ நந்தினி மேலும் கலக்க மடைந்தாள். "வஜ்ரவிலாஸினி இவரை—கணவரை—க் கொல்லவா காத்திருக்கிறாள்? அந்த அக்கிரம விஷயங்களை என் காதலர் தர்ம சிங்கா செய்தார்? இல்லை! இல்லை!! அம்மாதிரி செய்திருக்கவே மாட்டார்! அவர் நினைத்தால் அவளுடைய மனதிலிருக்கும் துன்பத்தை நொடிப் பொழுதில் உதறித் தள்ளியும் விடுவார்' என்று பலவாறாக எண்ணினாள். கடைசியாக அவள் கவலைகளையெல்லாம் ஒருவாறு நித்திராதேவி தன் மடியில் ஏற்றுக் கொண்டாள்.

4

இரவு வெகு நேரமாகியது: ஆகாயத்தில் இருள் சூழ்ந்து கொண்டது. கொக்குகளின் விகார அறை கூவல் சற்றைக்கொருமுறை கேட்டுக் கொண்டிருந்தது. ராஜநந்தினியின் கண் திறந்து பார்த்ததில் தர்ம சிங் அங்கில்லை. கவலை அதிகமாகிற்று. சட்டென்று எழுந்து வஜ்ரவிலாஸினியின் அறையின் கதவருகில் போய் நின்று உள்ளே என்ன நடக்கிறது என்று கவனிக்கலானாள். வஜ்ர விலாஸினி கையில் வாளுடன் நின்றிருந்தாள். தர்ம சிங் அவள் காலடியில் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தான். அதைப் பார்த்தும் ராஜ நந்தினியின் ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. தலை சுழன்றது. கால்கள் நடுக்கம் எடுத்தன, கீழே விழுந்து விடுவது போலாகி விட்டாள். அவள் தன் அறைக்கு வந்து முகத்தைத் தலைகணியில் புதைத்துப் படுத்துக் கொண்டாள்—ஆனால் கண்களிலிருந்து ஒரு சொட்டு நீர் கூட வரவில்லை.

மறுநாள் காலை அதி சீக்கிரமே பிருதிவி சிங் தர்மசிங்கினிடம் வந்தான். தர்மசிங்கை பார்த்துச் சிரித்துக்கொண்டே "காலை வேளை மிகவும் அழகாகயிருக்கிறது. வா—அப்படிப் போய் சுற்றிவிட்டு வரலாம்" என்றான்.

'சரி' என்று சம்மதித்தான் தர்மசிங். இருவரும் குதிரை மீது ஏறிக்கொண்டு காட்டின் பக்கம் போனார்கள். பிருதிவி சிங்கின் முகம் தாமரையைப் போல் மலர்ந்திருந்தது, ஒவ்வொரு அங்கத்திலும் உணர்ச்சி காணப்பட்டது. ஆனால் தர்மசிங்கின் முகம் கருத்திருந்தது. அவன் உடலில் உயிர் இருந்ததாகவே தெரியவில்லை. பிருதிவி சிங் பலமுறை வினயமாகப் பேசியும் தர்மசிங் மௌனமாகவே இருந்து வந்தான். குதிரைமீது சவாரி செய்து கொண்டே நதிக்கரையை அடைந்தார்கள். திடீரென்று தர்மசிங் பிருதிவிசிங்கைப் பார்த்து "நான் நேற்று இரவு ஒரு சபதம் செய்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே அவன் கண்களில் நீர் துளித்தது.

பிருதிவி சிங் கலவரத்துடன் "என்ன சபதம்" என்று கேட்டான்.

"நீ........வஜ்ரவிலாஸினியின் விஷயத்தைக் கேட்டிருப்பாய்! நான் அவள் தகப்பனாரைக் கொன்றவனை மேல் உலகத்திற்கு அனுப்பத் தான் சபதம் செய்து கொண்டேன்."

"உண்மையில் நீ வீரனுக்குகந்த பிரதிக்ஞைதான் செய்து கொண்டிருக்கிறாய்"

"நான் அதைப் பூர்த்தி செய்ய முடியும்—உன்னால் அவனைக் கொல்லமுடியுமல்லவா?"

"அப்பேர்ப்பட்ட பாதகனை என் வாளினாலா வெட்டச் சொல்கிறாய்?"

"ஆமாம், அது தான் என் விருப்பம். நான் எந்த காரணத்தினால் ஒரு வேலையை பூர்த்தி செய்ய முடியவில்லையோ, அதை நீ எனக்காகப் பூர்த்தி செய்ய மாட்டாயா?"

"கட்டாயம்! உனக்கு அவனைத் தெரியுமல்லவா?"

"நன்றாகத் தெரியும்"

"அப்படியானால் நல்லதாகி விட்டது. அந்தவேலையை நானே செய்கிறேன். உனக்கு ஒரு வேளை அவன் மேல் இரக்கம் வந்தாலும் வரலாம்..."

யுவதியின் சபதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

"ரொம்ப நல்லது ஆனல் இதை ஞாபகப் படுத்திக்கொள். அந்த மனிதன் மிகுந்த பாக்கியசாலி. அவன் பல முறை சாவின் வாயிலிருந்து தப்பித்துக்கொண்டிருக்கிறன். ஏதாவது காரணத்தால் உனக்கும் அவன் மேல் இரக்கம் வந்துவிட்டால்கூட அதை எண்ணுமல் நீ அவனைக் கட்டாயம் மேலுலகம் அனுப்புவதாகப் பிரதிக்ஞை செய்."

"நான் 'துர்கா'வின் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். அவனைக் கட்டாயம் கொன்றுவிடுவேன்."

"போதும்...—இனிமேல் இருவருமாகச் சேர்ந்து காரியத்தை முடித்துவிடுவோம். ஆனல் நீ உன் வாக்கிலிருந்து புரளமாட்டாயே?"

"ஏன்? நான் ஒரு வீரன் இல்லையா? ஒரு முறை எதற்காக வாக்குக் கொடுத்தேனே அதற்காக என் உயிர் போனலும் பாதகமில்லை. அதைப் பூர்த்தி செய்துதான் தீருவேன்!"

"யாராயிருந்தாலும்?"

"ஆமாம்; யாராக இருந்தாலும் சரி."

"ஒரு வேளை உன் பந்துவாகயிருந்தால்?"

"பந்துவாகயிருந்தால்—"

"அச்சம்பவம் உன் நெருங்கிய பந்துவால்தான் நடந்திருக்கிறது."

பிருதிவி சிங் கோபமாக "யாராக வேண்டுமானலுமிருக்கட்டும். என் சகோதரனுக இருந்தாலும் சரி—அவனைக் கொல்லாமல் விடமாட்டேன்" என்றான்.

தர்மசிங் குதிரையை விட்டுக் கீழே இறங்கினன். அவன் முகம் வாட்ட மடைந்திருந்தது. உதடுகள் துடித்தன. அவன் இடுப்பில் இருந்த கத்தியை எடுத்துத் தரையில் வைத்தான். "பிருதிவி சிங்கைக் கூப்பிட்டு "தயாராக இரு. அந்தப் பாதகன் அகப்பட்டுவிட்டான்" என்றான்.

பிருதிவி சிங் திடுக்கிட்டு நாலா பக்கங்களிலும் பார்த்தான். தர்மசிங்கைத் தவிர வேறு யாரும் அவன் கண்களில் தென்படவில்லை.

"பார்த்தாயா—வெட்டு அவனை"

"நான் அவனைப் பார்க்க முடியவில்லையே?"

"இதோ, உன் எதிரில் நிற்கிறன், அவன் தான்! இந்தப் பாபி தர்ம சிங்!"

பிருதிவி சிங் கலவரத்துடன் "அட! நீ—நான்" என்றான். "க்ஷத்திரியன் தன் வாக்கைப் பூர்த்தி செய்யவேண்டும்" அதைக்கேட்டதும் பிருதிவி சிங் மின்னலைப்போல் மின்னும் உடைவாளை உருவி தர்மசிங்கின் மார்பின்மீது பாய்ச்சினன். பிடிவரை கத்தி உள்ளே புகுந்தது. ரத்தம் 'பிரவாகம்' போல் பெருகிற்று. தர்மசிங் பூமியில் விழுந்து மெதுவான குரலில் "பிருதிவி சிங் நான் உன் நன்றி உள்ள நண்பன். நீ தான் உண்மையான வீரன். ஆண் மகனின் வீரத்தையும் வாக்கையும் காப்பாற்றினய்" என்றான். பிருதிவி சிங் பிரமித்துத் தரையின் மீது உட்கார்ந்துவிட்டான்.

5

அன்று ராஜ நந்தினி உடன் கட்டை ஏறும் நாள். அவள் தன்னை நன்ருக அலங்கரித்துக் கொண்டிருந்தாள். கழுத்தில் முத்து ஹாரம். காலில் செம்பஞ்சுக்குழம்புபட்டு சிவப்பாகயிருந்தது. அவள் 'சதி' யாகப் போவதைக் குறித்து உள்ளம் பூரித்திருந்தாள்.

அவள் முகம் சூரியனைப்போல் பிரகாசமாயிருந்தது. அவளைப் பார்த்தவர்களின் கண்கள் கூசின. காதலனை நினைத்து அழுது அழுது உருகிவிட்டாள். அவள் கண்களில் ஒரு பிரகாசம் ஜ்வலித்தது. மகாலக்ஷ்மியைப்போல் காட்சியளித்தாள். அவளுடைய நடை மிகவும் கர்வம் நிறைந்திருந்தது. அவள் கணவனின் தலையை மடியில் வைத்துக்கொண்டு சிதையில் அமர்ந்தாள். நெருப்பு மூட்டப்பட்டது.

நகரத்தில் உள்ளவர்கள் எல்லோரும் வேடிக்கை பார்க்கக் கூடியிருந்தார்கள். வாத்தியங்கள் முழங்கின. பூக்களை வாரி இறைத்தார்கள். சதி கணவனுடன் உட்கார்ந்திருந்தாள். பிருதிவி சிங் அவள் எதிரில் வந்து கைகூப்பி "மஹாராணி, என் குற்றத்தை மன்னித்து விடுங்கள்" என்றான்.

ராஜநந்தினி சட்டென்று "மன்னிப்பு என்பதே கிடையாது. நீ ஒரு யௌவன வாலிபனைக் கொலை செய்தாய். நீயும் வாலிபத்திலேயே மாண்டு விடுவாய்" என்றாள்.

பதிவிரதைகளின் வாக்கு என்ருவது வீண் போனதுண்டா? திடீரென்று நான்கு பக்கத்திலும் நெருப்பும் பிடித்துக்கொண்டது: 'சதி'யின் முகம் நெருப்பில் காலைச் சூரியனைப் போல் பிரகாசித்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த நெருப்பின் ஒளியைத் தவிர வேறு எதுவும் காணப்படவில்லை.

சதிபதிகளின் மனதில் எவ்வளவு ஒற்றுமை இருந்தது? அன்று தர்ம சிங்கின்முன் வஜ்ர விலாஸினி வந்து பின்னடைந்ததுமே அவள் சந்தேகப்பட்டாள். ஆனல் அதன் பிறகு இரவு தன் கணவன் அவள் முன் மண்டியிட்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் அவளுக்குச் சந்தேகமன்னியில், எல்லாம் தெளிவாகிவிட்டது. காலை தர்மசிங் எழுந்ததும் ராஜ நந்தினி அவனிடம் வஜ்ர விலாஸினியின் சத்துருவின் தலையை நீர்தான் கொண்டுவரவேண்டும் என்றாள். அதுபோலவேதான் ஆகியது. தான் உடன்கட்டை ஏறுவதற்கு வேண்டிய காரியங்களை அவளே செய்து கொண்டாள். பாபத்தின் நெருப்பு எப்படியிருக்கும்? ஒரு பாதகம் எவ்வளவு உயிரைப் 'பலி' வாங்கிவிட்டது? ராஜ வம்சத்தின் இரண்டு இளம் வாலிபர்கள், இரண்டு ராஜகுமாரத்திகள்! பதிவிரதையின் வாக்கு தப்பாமல் பிருதிவி சிங் டில்லியில் நடந்த யுத்தத்தில் இறந்துவிட்டான். துர்கா குமாரியும்

நவநாகரீகம்

★

கொலு!

★

தாசினி எழுதியது

* * * 'நான் நினைத்ததுக்குப் பரவாயில்லை: ஒரு சுமாருக்கு எல்லார் வீட்டிலும் கொலு வைச்சிருந்தார்களே?' என்று மாலினி சொன்னாள்.

'வைக்காமெ பின்னே என்ன செய்வார்களாம்? கொலு என்று ஒரு தரம் வச்சுட்டா, அப்புறம் சௌகரியமில்லை என்று அடுத்த வருஷம் வைக்காமல் இருக்க மனசு வருமா என்ன? சும்மா வைக்காமல் இருந்தால் ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்யரது என்று மனசு கிடந்து அடிச்சுக்காதா?, என்று பங்கஜம் நீளமானதொரு பிரங்கம் செய்தாள்.

'வருது நல்லதோ, கெடுதலோ கட்டாயம் வந்தே தீரும்; இதெல்லாம் நம்முடைய அற்பச் செயல்களுக்காக, நிற்கவோ. நடக்கவோ போரதா என்ன?' என்றாள் நளினிதேவி.

'இப்படி வேதாந்தமா நடக்க முடியரதா? அஞ்ஞானம் தான் கடந்து அடிச்சுக்கரதே? தத்துவக்ஞானம் தினப்படி, வாழ்க்கைக்குச் சரிப்படாது! என்றாள் கமலினி.

'தினப்படி வாழ்க்கையில் இதை அனுஷ்டித்தால் தான் நிம்மதியாக வாழலாம். வெந்துயர் வந்துற்றாலும், செந்திரு வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளம் வேண்டாமோ?' என்றாள் நளினி தேவி.

'போருமே உன் அர்த்த மில்லாத பேச்சு! கொலுவில் புதிசாக என்ன பார்த்தீர்கள்?' என்று சரோஜா கேட்டாள்.

'நீ பார்க்கலையா?" என்றாள் கமலினி.

'நான் நேற்றுத் தானே ஊரில் இருந்து வந்தேன்! இம்; என்ன பார்த்தீர்கள்?' என்றாள் கமலினி.

'ஒரு வீட்டிலே பொம்மைகளுக்கு பதில் அழகிய சாமான்களாகவே வைத்திருந்தார்கள். மற்றப்படி எல்லாம் வழக்கம் போல் தான்; சில வீடுகளில் சின்னச் சின்னக் கண்ணுடி, சீப்பு, குங்குமச் சொப்பு இதெல்லாம் வெற்றிலை பாக்குடன் கொடுப்பார்களே? இந்த வழக்கத்தை எல்லாருமே கைவிட்டு விட்டார்கள். இரண்டு புது தினுசுப் புடவைகள் பார்த்தேன்!" என்றாள் மாலினி.

'என்ன புடவை? நான் பார்க்கவில்லையே?' என்றாள் பங்கஜம்.

மாலினி சொன்ன புடவைகளில் ஒன்று, பார்க்கப்போனல் புதிய தினுசு இல்லா விட்டாலும் ரொம்பவும் நாசூக்காக இருக்கது மாராக் கருப்புப் புடவை. அரை முழ அகலத்துக்கு அரக்குக் கரை, இதில் நடுவில் ஒரு சாண் விட்டு இரண்டு அகல சரிகைப் பட்டிகள் போட்டிருந்தது. ஓரங்களுக்குச் சிகப்புக் கோடும், சரிகைக்கோடும். தலைப்பும் இப்படியே. ஆறு கஜம் புடவை தான். விலை முப்பத்தி ஐந்து ரூபாய்கள். அடையார் பாஷன் புடவை. நன்ருக இருந்தது.

மற்றொன்று மிகவும் மெல்லிய பட்டு ஆரஞ்சு நிறம். இதன் ஓரங்களுக்குப் பெரிய பெரிய இலைகள் மாதிரியில் ஆழ்ந்த பச்சைப் பட்டில் எடுப்பாக் நெய்து. இதன் நரம்புகளுக்கு சரிகை வேலை போட்டிருந்தது. தலைப்பும் இப்படியே இலைகள் சுமாருக்கு மூன்று விரல் அகலமும், சாண் நீளமும் இருந்தது. சாய்பாகப் போட்டிருந்தது. உடலில் அங்காங்கே சிறிய இலைகள் போட்டிருந்தது, இதுவும் ஆறு கஜம் புடவை தான் ஆனல் விலை மட்டும் தொண்ணூறு ரூபாய்களுக்கு மேல் ஆச்சுதாம். புடவை ஜோராகத் தான் இருந்தது. உங்கள் ஊர் நவராத்திரி கொலு எப்படி?

அட்டைப் படம்

பம்பாய் டாக்கீஸாரின் 'பஸந்த்' என்ற படத்தில் நடிக்கும் மும்தாஜ் சாந்தி.



ஆப்ரேஷனுக்குப்

பிறகும் அதிர்ச்சிக்குப் பிறகும், விபத்துக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. நீடித்த ரோகங்களாலும், பிரஸவத்தாலும், ஜுரங்களாலும் கூந்தல் நஷ்டமடைவதுண்டு. மயிர் விடாமல் உதிர்ந்து வந்தால் கேசத்துக்குப் பதில் அடித்தலையே புலப்படும்.

எந்தக்காரணத்தால் உதிர்ந்தாலும், கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். இழந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலை வளரச் செய்யுங்கள். இருக்கும் கூந்தலை இழக்காமல் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணு 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

மதன் இந்திய ரஸாயன சாலை.

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

சிறுவர் பகுதி

★

"விகடகவி"

★

கணேசய்யர்

"விகட கவி" என்ற பதம் ஒரு விதத்தில் இரு தலைப் பாம்பை ஒத்திருக்கிறதெனலாம். ஆரம்பத்திலிருந்து இரண்டெழுத்துக்களும், கடைசியிலிருந்து இரண்டெழுத்துக்களும் ஒரே மாதிரியாக இருக்கக் காண்பீர்கள். விகட கவியை வடமொழி, அதாவது ஸம்ஸ்கிருதத்தில், விதூஷகன் என்று பெயரிட்டு அழைப்பது மிகவும் ஸஹஜம். பண்டைக்காலங்களில் எல்லா அரசர்களும் தங்கள் தங்கள் அருகில் ஸதா ஒரு விதூஷகன் அல்லது விகடகவியை வைத்திருப்பது வழக்கம். அவர்களது வேலை தங்களது சாதுர்யமான விகடப் பேச்சுகளினுல் எல்லோரையும் அடிக்கடி நகைக்கும்படிச்செய்வதே. அவர்கள் செய்யும் தப்பிதங்கள் ஒரு பொழுதும் அவர்களைத் தண்டனைக்குள்ளாக்குவதில்லை. சிற்சில சமயங்களில் விகடகவிகள் அரசர்களுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கி விடுவதும் உண்டு. அப்பொழுது அரசன் அவர்களுக்குக்கடுமையான தண்டனைகள் விதிப்பதும் உண்டு. அவைகளிலிருந்து அவர்கள் சாமர்த்தியமாகத் தப்பித்துக்கொண்டு விடுவார்கள். ஒரு சமயம் ஒரு விகட கவிக்கு ஒரு அரசன் மரண தண்டனை விதித்தான். மரண தண்டனை நிறைவேற்றப்படுவது பற்பல விதங்களில் அது காலத்தையும் நாடுகளையும் பொறுத்திருக்கும் தற்காலத்தில் அமெரிக்காவில் மின்சார சக்தியினுல் மரண தண்டனை அடைந்தவர்களைக் கொல்லுகிறார்கள். பிரஞ்சு தேசத்தில் தலையை வெட்டி விடுகிறார்கள். ஆங்கில நாடுகளில் தூக்கிலிட்டுக் கொல்லுகிறார்கள். ஆனல், பண்டைக் காலங்களில் யானையின் காலால் இடறி அவர்கள் கொல்லப்படுவது ஸஹஜம். குற்றவாளியைக் கழுத்துவரைக்கும் பூமியில் புதைத்துவிட்டுப் பின்னர் யானையின் காலால் தலையை இடறிக் கொல்லுவது சாதாரணம். ஒருதரம் ஒரு விகட கவியைக் கழுத்து வரைக்கும் புதைத்து வைத்துவிட்டு யானையைக் கொண்டு வரப் போயிருக்கும் சமயத்தில், ஒரு வண்ணன் அவ்வழியாக வந்து கொண்டிருந்தான். அவன் ஒரு கூனன். எதற்காக அந்த விகட கவி அவ்வாறு புதைக்கப்பட்டிருக்கிறன் என்று அவன் கேட்டான். தனது கூன் நிமிருவதற்காக என்று அவன் பதிலளித்துத் தன்னை விடுவிக்குமாறு வேண்டினன். வண்ணனும் அவ்வாறு செய்து தன் கூன் நீங்கத் தான் கழுத்தளவு புதைக்கப்பெற்றான். விதூஷகனும் ஓடோடியும் சென்று அரசனை நமஸ்கரித்தான். "அட பாவி! நீ எப்படியடா தப்பினய் என்று அரசன் கேட்டான்." "எல்லாருமே தங்களைப் போலவே கடின ஹிருதயம் வாய்ந்தவர்களா என்ன! ஒரு வண்ணன் எனக்காகச் சாகத் தயாராக இருக்கிறனே யன்றோ" என்றான் விகட கவி. அரசனது ஆட்கள் ஓடோடியும் சென்று வண்ணனை விடுவித்தார்கள். விகட கவியின் சாமர்த்தியத்தை மெச்சி அரசன் அவனை மன்னித்தான். இது ஓர் உதாரணம். இத்தகைய அனேக உதாரணங்களும் கூறலாம். சகல நாடகங்களிலும் விகட கவி அல்லது விதூஷகன் இன்றியமையாத நாடகப் பாத்திரம். நாடகங்களில் பல சிறப்படைவது சாமர்த்தியம் வாய்ந்த ஒரு விதூஷகன் இருப்பதால் தான் எனலாம்.

விகட கவி ஏற்பட்டது அம்பிகையின் அருளால் என்பார்கள். ஒரு காலத்தில் ஒருவன் அம்பிகையைக் குறித்துத் தவம் செய்தான். காளி அம்மனும் பல முகங்களுடன் அவன் முன் பிரசன்னமானள். அவனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்து விட்டது. அவளைப் பார்த்ததும், கலகல வென்று நகைத்தான். அம்மனுக்கு மிக்கக் கோபம் வந்தது. "எதற்காகவடா நகைக்கிறாய்?" என்று கேட்டாள். "அம்மா! கோபிக்க வேண்டாம். எனக்கிருப்பது ஒரே முகம். சளி பிடித்தால் மூக்கைச் சிந்துவதற்கு இரண்டு கைகளே போதவில்லையே! அப்படிக்கிருக்க தங்களுக்குச் சளி பிடித்தால், இத்தனை முகங்களுடன் நீங்கள் கஷ்டப்படுவதை நினைத்தேன். அதனுல் வந்த சிரிப்பை என்னுல் அடக்க முடியவில்லை" என்றான்.

"அடே! நீ விகடம் செய்வதால் விகட கவியாகப் போகக் கடவது" என்று சாபமிட்டாள். "அம்மா! நல்ல வரம் தான் தந்தீர்கள். விகட கவி!!! பேஷ்! முன்னல் இருந்து பார்த்தாலும் பின்னல் இருந்து பார்த்தாலும் ஒரே வார்த்தையே யன்றோ! இதைத் தவிர வேறு வரம் வேண்டேன்" என்றான் அவன்.

அவனது குண்டு தைரியத்தைக் கண்டு மெச்சிக் கருணை கூர்ந்து அவள் "விகட கவியின் மேன்மை உலகத்தில் எல்லோராலும் 'புகழப்படட்டும்'" என்று ஆசி கூறி அவனை அனுப்பினளாம்!

தஞ்சாவூர் ஜில்லா திருக்காட்டுப்பள்ளிக்கு அடுத்த ஒன்பத்வேலி ரிடயர்ட் சப்ஜட்ஜ் ஸ்ரீமான் O.S. நாராயணசாமி அய்யர் குமாரன் சிரஞ்சீவி N. சுப்ரமணியனுக்கும், சென்னை லயோலா காலேஜ் புரபஸர் ஸ்ரீமான் P. C. ராமச்சந்திரன் குமாரி சௌ. பாலசுந்தரிக்கும், சென்ற ஜூன் மாதம் விவாகம் நடந்தது.



"உஷா"

மெஷின்களையே வாங்குங்கள்.

மலிவானதும், அழுத்தமானதுமான சுதேசி தையல் மெஷின் இதனுல் பூரா திருப்தியடையுங்கள்.

உஷா தையல் மெஷின் பிரத்யேக பாகங்களை வாங்குங்கள். எல்லா தயாரிப்பு மெஷின்களுக்கும் தகுந்தவை. எமது பாகங்களை மாற்றிக்கொள்ளலாம். இயந்திரத்தால் செய்யப்படுபவை. உயர் ரகம். திறமையான வேலைப்பாடு. மிகக் குறைந்த விலையில் ஏராளமான சப்ளைகள் கிடைக்கும். உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஜே எஞ்ஜினியரிங் ஓர்க்ஸ் லிமிடெட்,

C/o Mr. பயரிலால் மல்ஹோத்ரா,

1, மலனி ரோட், தியாகராய நகர், மதராஸ்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

அக்பர் காலத்துக் கூஜா

ஹாஸ்யக் கதை

★

அன்னபூரணானந்த வர்மா எழுதியது

★

"புஷ்பம்" மொழிபெயர்ப்பு

லாலா ஜாவுலாலுக்குச் சாப்பாட்டுத் துணிக்குக் குறைவில்லை. காசியில் பாத்திரக் கடைத்தெருவில் அவர் தமது சொந்த வீட்டில் வசித்து வந்தார். தாம் மாடியில் இருந்துகொண்டு கீழே கடைகளைக் குடிக் கூலிக்கு விட்டிருந்தார். நூறு ரூபாய்க்குக் கிட்டதட்ட மாதந்தோறும் குடிக்கூலி வந்துகொண்டிருந்தது. அவருக்குக் குழந்தை குட்டிகள் இல்லை; தம்பதிகள் இரண்டே பேருக்கு நல்ல சாப்பாடும் சுக போகங்களும் கிடைப்பதற்கு இவ்வளவு போதாதா? ஆனால் ஒரே மொத்தமாக இருநூற்றைம்பது ரூபாயை அவர் கண்ணால்கூடக் கண்டதில்லை.

அதனால்தான் அவர் மனைவி திடீரென்று ஒரு நாள் தனக்கு ரூ. 250 வேண்டுமென்று கேட்டபோது அவர் மனம் வேகமாக ஒரு குலுக்குக் குலுங்கி அப்படியே சோர்ந்து போயிற்று. அழியப்போகும் நீர்க்குமிழியை ஒத்த அவர் மன நிலையைக் கண்டு, அவர் மனைவி, "இதற்காக இவ்வளவு பயப்படுவானேன்? உங்களால் முடியாவிட்டால் என் தம்பியிடம் வாங்கிக் கொள்ளுகிறேன்" என்றாள்.

இந்த இனிய சாட்டையடி லாலாவைத் துடிதுடித்தெழச் செய்தது. அவர் சிறிது கோபத்துடன், "இருக்கட்டுமடி! 250-ரூபாய்க்காகத் தம்பியிடம் போய்ப் பிச்சை கேட்கப் போகிறாயோ? எல்லாம் என்னிடம் இருந்தே வாங்கிக் கொள்" என்றார்.

"ஆனால் எனக்குப் பணம் இந்த ஜன்மத்திலேயே வேண்டும்."

"இதே வாரத்தில் வாங்கிக் கொள்ளடி."

"வாரம் என்றால் உங்கள் கணக்கில் ஏழு நாட்களா அல்லது ஏழு வருஷங்களா?"

லாலா பெருந்தன்மையாக நின்றுகொண்டு, "இன்றையிலிருந்து ஏழாவது நாள் என்னிடமிருந்து இருநூற்றைம்பது ரூபாய் வாங்கிக்கொள்" என்றார்.

"நீங்கள் ஆண் பிள்ளையாயிருந்தால் இந்தப் பேச்சுத் தவறமாட்டீர்கள்?"

"ஆமாம், ஆமாம்! அப்படித்தான்!"

ஆனால் நான்கு நாட்கள் இப்படியப்படியாகக் கழிந்த பின்பும், ரூபாய்க்கு ஏற்பாடு செய்ய முடியாமற் போகவே, அவர் நெஞ்சம் கலங்கியது. 'இந்தப் பிரச்னை நமது கௌரவத்தைப் பற்றியது; நமது வீட்டிலேயே நம் அதிகாரத்தைப்பற்றியது. பணங் கொடுப்பதாக வாக்குறுதி அளித்த பின்பும் இப்போது நம்மால் பணம் கொடுக்க முடியாவிட்டால் அவள் நம்மைப்பற்றி எவ்வளவு கேவலமாக நினைப்பாள்? எத்தனையோ தடவைகள் நான் என் பெருமையைப்பற்றி அவளிடம் ஜம்பமாகப் பேசியிருக்கிறேனே! இப்போது பின் வாங்குவது சரியா? அவள் இப்போதுதான் முதல் தடவையாக வாயைத் திறந்து ரூபாய் கேட்டிருக்கிறாள். இந்தச் சமயம் நாம் வாலைக் குழைத்துக்கொண்டு ஓடிவிட்டால் நாளைக்கு அவளுக்கு எப்படி முகம் காட்டுவது?' என்று அவர் சிந்திக்கலானார். 'ஆண் பிள்ளையாயிருந்தால் பேச்சுத் தவறமாட்டீர்கள்' என்ற சொற்கள் அவர் காதுகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தன.

இப்படியே இன்னுமொரு நாள் கழிந்தது. ஐந்தாம் நாள் அவர் மிகவும் பயந்து போய், இந்த ஆபத்தைத் தமது பிராண சிநேகிதரான பண்டிதர் பிலவாசி அவர்களுக்குத் தெரிவித்தார். போதாத காலம்; அப்போது பிலவாசியின் கையும் வறண்டிருந்தது. "இந்தச் சமயத்தில் என் கையில் அடியோடு பணமில்லை; ஆனால் எங்கேயாவது கேட்டுப் பார்க்கிறேன். பணம் கிடைத்தால் நாளைச் சாயங்காலம் உங்கள் வீட்டுக்கு வந்து பார்க்கிறேன்" என்றார்.

இன்றுதான் அந்தச் சாயங்காலம்; வாரத்தின் கடைசி நாள். நாளைக்கு அவர் ரூபாயையாவது எண்ணி வைக்க வேண்டும்; அல்லது தமது கௌரவத்தையெல்லாம் இழந்து தலை முழுகிவிட வேண்டும். நாளைக்கு அவர் தம் மனைவிக்கு ரூபாய் தராவிட்டால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது; அவள் அவரைத் தூக்கிலிட மாட்டாள், சும்மா ஒரு சிரிப்புச் சிரிப்பாள். ஆனால் அந்தச் சிரிப்பு எப்படி இருக்கும்? அந்தச் சிரிப்பைக் கற்பனை செய்து பார்த்தபோதே லாலாஜியின் குடல் நடுங்கியது.

இன்னும் பிலவாசியும் வரவில்லை. இன்று சாயங்காலம் தான் அவர் வருவதாகச் சொல்லியிருந்தார். லாலா அவரையே நம்பியிருந்தார். "ஒருவேளை அவர் வராவிட்டால்? இன்னும் எங்காவது அவருக்குப் பணம் கிடைக்காமலிருந்தால்?"

இதே யோசனையில் ஆழ்ந்தவராய் லாலாஜீ மேலே மொட்டை மாடியில் உலாவிக் கொண்டிருந்தார். அவருக்குத் தாகமெடுப்பது போலிருந்தது. வேலைக்காரனுக்கு அங்கிருந்தே உத்தரவு போட்டார். ஆனால் வேலைக்காரன் வரவில்லை. அவருடைய பத்தினியே தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தாள். ஹிந்து சமூகத்தில் பெண்களின் நிலைமை எவ்வளவு வருந்தத்தக்கதாயிருக்கிறது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே! ஒன்றுக்குமுதவாத அகமுடையானுக்குத் தாகம் எடுத்தால், மனைவிதான் பரவம் தண்ணீரை யெடுத்துக் கொண்டு அவன் முன்பு போய் ஆஜராக வேண்டும்!

அவள் ஒரு வெண்கலக் கூஜாவில் தண்ணீர்கொண்டுவந்தாள். டம்ளர் கொண்டுவர மறந்துவிட்டாள்; அந்தக் கூஜாவின் டாலே லாலாஜிக்கு எப்போதும் பிடிக்காது. கூஜா புதுக் கூஜாதான். வாங்கி ஓரிரண்டு வருஷங்கள் தான் ஆயிருக்கும். ஆனால் அதன் வடிவத்தைப் பார்த்தால் மத்தளம் இதற்குத் தகப்பனாகவும் தாமிரச் செம்பு இதற்குத் தாயாகவும் இருந்திருக்குமோ என்று சொல்லும்படி அவ்வளவு விகாரமாயிருந்தது.

லாலாஜி கூஜாவை வாங்கிக் கொண்டார்; ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவர் தம்மனைவியிடம் மிகவும் மரியாதையாக நடந்து கொள்வது வழக்கம். அப்படித்தானே இருக்கவேண்டும்? அதுதானே நாகரீகம்? தன் மனைவிக்கு மனைவியாகாத கணவனைக் கணவன் என்று சொல்லலாமா? 'தேவலை, கூஜாவிலாவது தண்ணீர் கிடைக்கிறதே; அது விசேஷம்தான்! இப்போது ஏதாவது 'கடுபிடி' செய்தேனே, அப்புறம் சாப்பாடு பக்கெட்டில் கிடைத்தால் என்ன செய்வது?' என்று யோசித்து லாலாஜி தம் கோபத்தை அடக்கிக் கொண்டு கூஜாவிலிருந்தே தண்ணீர் குடிக்கலானார்.

அப்போது அவர் மாடியின் கைப்பிடிச்சுவரருகே நின்றுகொண்டிருந்தார். தண்ணீர் குடிப்பது சம்பந்தமாக விதிகள் ஏற்படுத்திய பெரியோர்கள். "நின்றுகொண்டே தண்ணீர் குடிக்காதே; தூங்கப் போகும் போது தண்ணீர் குடிக்காதே ஓடிய பின்பு தண்ணீர் குடிக்காதே" என்றெல்லாம் விதிகள் ஏற்படுத்தினார்களே யொழிய, "மாடிச் சுவரினருகு நின்றுதண்ணீர் குடிக்காதே" என்ற விதியை எப்போதும் யாரும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றி அவர்கள் ஒன்றுமே சொல்லவில்லை என்று தெரிகிறது.

ஆகவே லாலாஜி மாடியின் கைப்பிடிச்சுவரினருகே நின்றுகொண்டு தண்ணீர் குடிக்க ஆரம்பித்ததில் ஒன்றும் தவறு செய்துவிடவில்லை. ஆனால் அவர் இரண்டொரு வாய் குடித்திருப்பாரோ இல்லையோ; என்ன காரணத்தினாலோ அவர் கை அசைந்தது; கூஜா அவர் கையிலிருந்து நழுவியது.

கூஜா முன்னும் பார்க்கவில்லை, பின்னும் பார்க்கவில்லை அது விண்வீழ்க்கொள்ளியும் தோற்றுப்போகும்படியான வேகத்தில் கீழேதெருவில் பாய்ந்தோடிக் கண்களுக்குத் தெரியாமல் மறைந்தது. ஏதோ ஒரு காலத்தில் நியூடன் என்ற ஒரு ஸயன்ஸ்காரன் பூமியின் ஆகர்ஷணசக்தி என்று ஒரு வஸ்துவைக் கண்டுபிடித்தானாமே, அந்தச் சக்தி முழுதும் இப்போது இந்தக் கூஜாவின் பக்கத்திலிருந்தது என்று சொல்லத் தேவையில்லை.

லாலாஜிக்கு வாயில் பல்லில் ஈரமில்லை; பாத்திரக்கடைத் தெருவில் எப்போதுமே ஜன நடமாட்டம் அதிகம்; அப்படிப் டாம் மாடியிலிருந்து, தண்ணீர் நிரம்பிய கூஜா கீழே வந்து விழுந்தால், அது என்ன விளையாட்டா, வேடிக்கையா? அந்தக் கூஜா எந்த அபாத்திரனின் மண்டையிலே காசிவாசத்தின் செய்தியை எடுத்துக்கொண்டு போய் விழுமோ?

அப்படித்தான் ஏதோ நடந்திருக்கவேண்டும். தெருவில் 'ஓ' என்ற கூச்சல் கேட்டது. லாலாஜி கீழே இறங்கிப் பார்க்கப் போவதற்குள், ஒரு பெரியக்கூட்டம் அவர் வீட்டு முற்றத்தில் ஜனங்களை நட்டித் தள்ளிக்கொண்டு வந்தது.

அந்தக் கூட்டத்தில் ஓர் ஆங்கிலேயன் பிரதானப் பாத்திரமாயிருப்பதையும், அவன் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் தண்ணீரில் நீராடியிருப்பதையும், அவன் தன் ஒற்றைக்கால் கட்டை விரலைக் கையால் தடவிக்கொண்டே மற்றொரு காலால் குதித்துக்கொண்டிருப்பதையும் லாலாஜி கண்டார். அவனருகிலேயே அந்த அபராதியான கூஜாவைக்கண்டு அவர் நடந்த விஷயங்களை ஒருவாறு ஊகித்துக்கொண்டார். முழு விவரங்களும் அவருக்குப் பின்புதான் கிடைத்தன.

நடந்த விவரங்கள் என்னவென்றால், தெருவில் போய் விழுவதற்கு முன்பு அந்தக் கூஜா ஒரு கடையின் சாய்வான கூரைமீது போய் முட்டியது; அங்கிருந்து அது அந்த வெள்ளைக்காரனைத் தலையிலிருந்து கால் வரையில் சாங்கோபாங்கமாக நீராட்டியது. பிறகு அவனுடைய பூட்ஸினருகில் போய் விழுந்தது. இந்தியக் கூஜாவும் இந்திய மனிதன் விழுமிடத்திலே தான் கடைசியில் போய் விழுந்ததென்பது கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

லாலாஜி தான் அந்தக் கூஜாவுக்குச் சொந்தக்காரர் என்பதை அறிந்துகொண்டதுமே அந்த வெள்ளைக்காரன் முதல் வேலையாகத் தன் வாயை அது போனபடிக்குத் திறந்து விட்டுவிட்டான். இங்கிலீஷ் பாஷையில் வசவுகளின் இவ்வளவு பெருத்த அகராதியிருக்கிறதென்பதை லாலாஜி அன்றுதான் தெரிந்துகொண்டார்.

இதே தருணத்தில் பிலவாசி கூட்டத்தைப் பிளந்துகொண்டு முற்றத்தில் வந்து தரிசனம் தந்தார். அவர் வந்தவுடனே அந்த வெள்ளைக்காரனைத் தவிர மற்

பேரை யெல்லாம் வெளியே அனுப்பினார். பிறகு முற்றத்தில் ஒரு நாற்காலியைப் போட்டு, அந்த வெள்ளைக்காரனிடம் "தங்கள் காலவிரலில் ஒரு வேளை காயம் பட்டிருந்தாலும் இருக்கும். தாங்கள் சுகமாக இந்த நாற்காலியில் உட்காருங்கள்" என்றார்.

துரை பிலவாசிக்கு வந்தனம் செய்துவிட்டு உட்கார்ந்தான்; லாலாஜியைச் சுட்டிக் காட்டி, "உமக்கு இந்த மனிதனைத் தெரியுமா?" என்று பிலவாசியை கேட்டான்.

"தெரியவே தெரியாது; தெருவில் செல்லும் நிரபராதிகளைக் கூஜாவினால் தாக்கும் இப்படிப்பட்ட மனிதனைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் எனக்கு இஷ்டமில்லை."

"அவன் ஒரு ஆபத்தான வைத்தியக்காரனாக இருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன்."

"இல்லை, இல்லை; அவன் ஒரு ஆபத்தான குற்றவாளி என்று நான் சொல்லுகிறேன்."

கடவுள் லாலாஜியின் கண்களுக்குப் பார்க்கும் சக்தியோடு கூடவே சாப்பிடும் சக்தியையும் கொடுத்திருப்பாரானால் இவ்வளவு நேரத்துக்கெல்லாம் அவர் பிலவாசியைத் தம் கண்களாலேயே விழுங்கிவிட்டிருப்பார் என்பது நிச்சயம். பிலவாசிக்கு இப்போது என்ன வந்துவிட்டது என்பதே அவருக்குப் புரியவில்லை.

"அப்படியானால் இப்போது என்ன செய்யலாம்?" என்று துரை பிலவாசியைக் கேட்டான்.

"போலீஸில் உடனே இதைப் பற்றி ரிபோர்ட்டு கொடுங்கள். இந்த மனிதனை அவர்கள் அரெஸ்டு செய்து விசாரணை நடத்துவார்கள்."

"போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது?"

"இதோ சமீபத்தில் இருக்கிறது. நானும் வருகிறேன், போகலாம்."

"சரி, வாருங்கள்."

"இதோ வந்து விட்டேன். தாங்கள் அநுமதி தந்தால் நான் முதலில் இந்தக் கூஜாவை இந்த ஆசாமியினிடமிருந்து வாங்கிக் கொள்வேன்.—என்ன ஐயா, இதை எனக்கு விற்கிறீரா? நான் ஐம்பது ரூபாவரை இதற்கு விலையாகக் கொடுக்க முடியும்."

லாலாஜி பேசாமல் சும்மா இருந்தார். ஆனால் துரை, "இந்த உபயோக மற்ற கூஜாவுக்குத் தாங்கள் ஏன் ஐம்பது ரூபாய் கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"இந்தக் கூஜாவையா தாங்கள் உபயோகமற்றது என்கிறீர்கள்? ஆச்சரியமாயிருக்கிறதே! நான் தங்களை எல்லா விஷயங்களுமறிந்த ஒரு படித்த பெரிய மனுஷர் (Educated Gentleman) என்றல்லவா நினைத்திருந்தேன்?"

"விஷயமென்ன? சொல்லுங்களேன்?"

"இது ஸார். ஒரு சரித்திர காலத்துக் கூஜா என்று தோற்றுகிறது, தோற்றுகிறதாவது; இது அந்தப் பிரசித்தமான அக்பர் காலத்துக் கூஜா என்று நான் உறுதியாக நம்புகிறேன். ளெல்லாம் இதைத் தேடித்தேடி யலைகின்றன."

"அப்படியா?"

"ஆமாம், ஸார்! பதினாறாம் நூற்றாண்டில் பாதுஷா ஹுமாயூன் ஷேர் ஷாவிடம் தோல்வியுற்று ஓடினானல்லவா? அப்போது அவன் ஸிந்து நாட்டுப் பாலை வனத்தில் அலைந்தலைந்து திரிந்தான். ஒரு சமயம் தாகத்தினால் அவனுக்குப் பிராணனே போய் விடும் போலிருந்தது. அப்போது ஒரு பிராமணன் இதே கூஜாவில் தண்ணீர் கொடுத்து அவன் உயிரைக் காப்பாற்றினான். ஹுமாயூனுக்குப் பின்பு அக்பர் டில்லியின் அரசனானதும் அவன் அந்தப் பிராமணனைத் தேடிப் பிடித்து அவனிடமிருந்து இந்தக் கூஜாவை வாங்கிக்கொண்டான். இதற்குப் பதிலாக அவனுக்கு இதே மாதிரியான பத்துப் பொன் கூஜாக்கள் செய்து கொடுத்தான். இந்தக் கூஜா சக்ரவர்த்தி அக்பருக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால்தான் அதற்கு 'அக்பர் காலத்துக் கூஜா' என்று பெயர். 1557-ம் வருஷம் வரையில் இந்தக் கூஜா பாதுஷாவின் அரண்மனையிலேயே இருந்ததாகத் தகவல் கிடைக்கிறது. அதற்கப்புறம் இது தொலைந்து போயிற்று. கல்கத்தாவிலுள்ள மியூஸியத்தில் பிளாஸ்டரில் செய்யப்பட்ட இதனுடைய மாடல் ஒன்று வைத்திருக்கிறது. இந்தக் கூஜா இந்த மனிதன் கைக்கு எப்படி வந்ததோ தெரியவில்லை! மியூசியம்காரர்களுக்குத் தெரிந்தால் சொன்ன விலை கொடுத்து வாங்கிக் கொண்டு போய் விடுவார்கள்."

இந்த விவரத்தைக் கேட்டதும் துரைக்கு ஆவலும் ஆச்சரியமும் உண்டாயின. "அப்படியானால் தாங்கள் இந்தக் கூஜாவை வாங்கி என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று பிலவாசியைக் கேட்டான்.

"பழைய சரித்திர கால வஸ்துக்களைச் சேர்த்து வைப்பதில் எனக்குப் பிரியம் அதிகம்."

"எனக்கும் அதில் அதிகப் பிரியமுண்டு. இந்தக் கூஜா என் மீது விழுந்த போதுகூட நான் அது தான் செய்து கொண்டிருந்தேன்; அந்தக் கடையில் சில பழைய பித்தளை விக்கிரகங்களை வாங்கிக் கொண்டிருந்தேன்."

"எது எப்படியிருந்தாலும் இந்தக் கூஜாவை நான் தான் வாங்குவேன்."

"அதை நீங்கள் எப்படி வாங்குவீர்கள்? நான் தான் வாங்குவேன். எனக்கு உரிமை யுண்டு."

"உரிமையா?"

"ஆமாம்; கட்டாயம் உரிமை யுண்டு. அந்தக் கூஜாவிலிருந்த தண்ணீரினால் நான் ஸ்நானம் செய்தேனா, நீங்களா?—சொல்லுங்கள்."

"நீங்கள் தான்."

"அது என் கால்கள் மீது விழுந்ததா, அல்லது உங்கள் கால்களின் மேலா?"

"உங்கள் கால்கள்மீது தான்"

"அது என் கால் கட்டை விரலை நசுக்கியதா, அல்லது உங்கள் கால் கட்டை விரலைத்தான்."

"ஆகவே எனக்கு அதை வாங்க உரிமையுண்டு."

"இதெல்லாம் வீண் வாதம். விலை சொல்லுங்கள். எவன் அதிக விலை சொல்லுகிறானோ, அவன் வாங்கிக் கொண்டு போகட்டும்."

"சரி, அப்படியே, நீங்கள் ஐம்பது ரூபாய் கொடுப்பதாகச் சொன்னீர்கள்; நான் நூறு ரூபாய் கொடுக்கிறேன்"

"நான் நூற்றைம்பது ரூபாய் கொடுக்கிறேன்"

"நான் இருநூறு ரூபாய் கொடுக்கிறேன்"

"ஸார், நான் இருநூற்றைம்பது ரூபாய் கொடுக்கிறேன்" என்று சொல்லி, பிலவாசி இருநூற்றைம்பதுக்கு நோட்டுக்களை லாலாஜியிடம் வீசி எறிந்தார்.

துரைக்கும் ரோஷம் பிறந்தது. "நீங்கள் இருநூற்றைம்பது அல்லவா கொடுக்கிறீர்கள்? நான் ஐந்நூறு ரூபாய் கொடுக்கிறேன். எடும் கூஜாவை" என்றான்.

பிலவாசி வருத்தத்துடன் தம் ஆசைகளின் பிணத்தை எடுப்பவர்போல், தம் ரூபாய்களை எடுத்துக்கொண்டார். துரையைப் பார்த்து, "கூஜா தங்களுடையதாய்விட்டது. எடுத்துக் கொண்டு போங்கள்! என்னிடம் இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேல் இல்லை" என்றார்.

இதைக் கேட்டவுடன் துரையின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது. அவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கூஜாவைக் கையில் எடுத்துக்கொண்டு, "இனி நான் ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டே என் தேசத்துக்குப் போவேன். மேஜர் டக்ளஸ்ஸின் பீத்தல்களைக் கேட்டுக் கேட்டு என் காதுகள் புளித்துப் போயின" என்றான்.

"மேஜர் டக்ளஸ் யார்?"

"மேஜர் டக்ளஸ் எனக்குப் பக்கத்து வீட்டுக்காரர், பழைய பண்டங்களைச் சேர்ப்பதில் ஸதா அவருக்கும் எனக்கும் போட்டி தான். போன வருஷம் அவர் இந்தியாவுக்கு வந்திருந்தார்; இங்கிருந்து ஜஹாங்கீர் காலத்து முட்டையை வாங்கிக்கொண்டு போயிருந்தார்."

"ஜஹாங்கீர் காலத்து முட்டையா?"

"ஆமாம் ஸார், ஜஹாங்கீர் காலத்து முட்டை. இந்தியாவிலிருந்து தாம் ஒருவர்தான் இந்த மாதிரியான வஸ்துவை வாங்கிக் கொண்டு போகமுடியும் என்று மேஜர் டக்ளஸ்ஸுக்கு எண்ணம்."

"அது சரி, இந்த ஜஹாங்கீர் காலத்து முட்டை என்பது என்ன?"

'ஒரு புறாவினால் தான் ஜஹாங்கீருக்கும் நூர்ஜஹானுக்கும் காதலுண்டாயிற்று என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? என் புறாவை நீ எப்படிப் பறக்கவிட்டாய்?' என்று ஜஹாங்கீர் கேட்டதும், நூர்ஜஹான் தன் கையிலிருந்த இன்னொரு புறாவையும் பறக்க விட்டுவிட்டு, 'இப்படித்தான்' என்று பதில் சொன்னாள். அவளுடைய

நரஸுஸ் காபியைப் போன்ற புத்துயிரளிக்கும் பானம் வேறொன்றுமில்லை

கடுமையான வேலைக்கோ, விளையாட்டுக்கோ பிறகு உங்கள் களைப்பைப்போக்கி ஊக்கமளிக்கும் பானம்.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும். மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்: சேலம்.

MNCK-11-TM

WHY SUFFER? PLEASE TAKE
Dr. PAUL'S VIM PILLS
The Great Scientific Medicine for Nervous Debility, Sexual Weakness, Loss of Power, Heart Palpitation, Diabetes, Gout, Rheumatism, Constipation etc., etc., Act like Magic, Purify Blood and Strengthen Nerves and increase Strength.
Rs. 2-8 per Phial of 30 pills Appah & Co., 16, Taylors Road, Kilpauk, Madras.

கவலை வேண்டாம்
உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.
மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரித்திரம்
15-வது கீர்த்தனம்

I

பல்லவி

க்ருஷ்ணு! மாகேமி தோவ பல்கு
கீர்தி கல்குனு தேவ! தேவ! பால!

அனு பல்லவி

ஸரிகெ ரவிகெலெல்ல போயெ
வெர்ரி சலிகி மேமோர்வ நாயெ ஸ்ரீ

சரணம்

1. ஸரிவாரிலோ ஸிக்கு போயெ
நீரு ஜானுலபை தாகனுயெ ஸ்ரீ
2. ஸர்வமு நேனனு கொன்ன நீது
ஸாமர்த்யமு ஜூபு சின்ன ஸ்ரீ
3. பாயலேனி மம்மு. நீவு யே யு-
பாய மைனதெல்பி ப்ரோவி ஸ்ரீ
4. மாதோ ஜேரக யிந்தபாத கல்கெ
மரதுமா யிக ப்ராண நாத! ஸ்ரீ
5. இந்து கனுசு தல்லி ஸாகெனோ லேக
யே பாபுல கண்ட்லு தாகெ னோ
6. ராகேந்து முக! தயராதா த்யாக-
ராஜார்சித! ப்ரோவ ராதா ஸ்ரீ

II

தேவ! தேவ! பால கிருஷ்ணு!—தேவாதிதேவனே! நந்த கோப மைந்தனான க்ருஷ்ணு!
மாகு ஏமி தோவ பல்கு—எங்களுக்கு என்ன வழி சொல்வாய்
கீர்தி கல்குனு—இந்த சங்கடத்திலிருந்து எல்லோரையும் காப் பாற்றினல் உனக்கு என்றும் அழியாக்கீர்த்தி உண்டாகும்
ஸரிக ரவிகெலெல்ல போயே—நாங்கள். அணிந்து கொண் டிருந்த சரிகை ரவிக்கைகளெல்லாம் ப்ரவாகத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டனவே!
வெர்ரிசலிகி—கொடுமையான குளிரினல்
மேமு ஓர்வ நாயெ—நாங்கள் அவஸ்தை யுரும்படியாய் விட்டதே
ஸரிவாரிலோ—ஸமதை யுள்ளவர்களின் மத்தியில்
ஸிக்கு போயெ—எங்கள் மானம் போகும்படி ஆயிற்றே!
நீரு ஜானுலபை தாகனுயெ—ஓடத்தில் முழங்கால் அளவு ஜலம் புகுந்து விட்டதே
சின்ன பாலக்ருஷ்ணு!—குழந்தை வடிவங் கொண்டுள்ள க்ருஷ்ணமூர்த்தியே!
ஸர்வமு நேனு அனுகொன்ன—எல்லாவற்றிற்கும் காரண புருஷன் நான் தான் என்று சொல்லிக்கொண்ட
நீது ஸாமர்த்யமு ஜூபு—உனது உண்மையை விளக்கி எங்களை ரக்ஷித்தருள்வாய்.
பாயலேனி மம்மு—உன்னைப் பிரிந்திருக்க முடியாத எங்களை
நீவுயே உபாயமு ஜன தெல்பிப்ரோவு—நீ ஏதாவது உபாயத்தைத் தெரிவித்துக் காப்பாற்றுவாய்
மாதோ ஜேரக—எங்களுடன் சேர்ந்ததால்
இந்த பாத கல்கே—உனக்கு இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டது.
ப்ராணநாத! பாலகிருஷ்ணு—எங்கள் ப்ராணபதியான க்ருஷ்ணு
யிக மரதுமா—இனி இதை மறக்கமுடியுமா?
இந்து கனுசு தல்லி ஸாகெனோ—இதற்காகவென்று உன் தாயர் உன்னை வளர்த்தாள்?
லேகயே பாபுல கண்ட்லு தாகெனோ—இல்லாவிடில் எந்த பாபியின் கண் பட்டதோ!
ராகேந்துமுக!—சந்திரன் போன்ற முகத்தை யுடையவனே!
த்யாகராஜார்சித!—த்யாகராஜனல் பூஜிக்கப்பட்டவனே!
தயராதா—எங்களிடம் உனக்கு தயவு வராதா?
ப்ரோவ்ராதா—எங்களை நீ காப்பாற்றக் கூடாதா?

III

முன்கதைச்சுருக்கம்:—

கண்ணன் வேணுகானத்தைக் கேட்டு பரவசமடைந்த கோபியர்கள் அவனுடன் யமுனா தீரம் சென்று ஓர் ஓடத்தில் ஏறி உல்லாஸமாகப் பொழுது போக்கினர். தாங்கள் அடைந்த இன்பத்தினல் தங்களுக்கு சமானம் ஒருவருமில்லை என்று கர்வமடைந்து தங்கள் நிலைமை மறந்து கண்ணனையும் பரிகாசம் செய்யலானார்கள். இவர்கள் கர்வத்தை அடக்க பகவான் இந்திராதி தேவர்கள் உதவியால் காற்று, மழை வருவித்து ஓடத்திலும் ஒரு துவாரம் உண்டாகும்படியும் செய்தார். இதைக் கண்ட கோபியர்கள் மனம் வருந்தி தங்கள் செயலுக்காகத் தங்களை நொந்து கொண்டு சர்வ சக்தனான கண்ணனை சரணடைந்து அவ்வாபத்தினின்றும் எல்லோரையும் தப்புவிக்க ஏதாவது உபாயம் சொல்லுமாறு பிரார்த்தித்து வேண்டிக் கொண்டனர்.

அதற்கு கண்ணன்

அங்கலார்சராது ஓபு—ஜங்க வேணு லாராயா
யங்க ஜாரிகைன கர்ம—மந்தரான லம்பு ஸா
ரங்க நேத்ரு லார பஞ்ச—ரங்கு கஞ்சி கம்புலன்
பொங்கிவச்சு நீடி கண்ட—பொந்து கானு னுஞ்சரே

"கரு நிறமான கூந்தலையுடைய கோபியர்களே! இந்த சமயத்தில் நீங்கள் தைரியத்தை இழக்கலாகாது. பரமசிவனையும் கர்மம் விடாது. மான் விழிகளை யொத்த கண்களை யுடையவர்களே! உங்கள் பஞ்ச வர்ண ரவிக்கைகளை யெல்லாம் அந்தப் படகு த்வாரத்தில் திணியுங்கள்." என்று கூற கோபியர்கள்

ஆ மனவினி வினிசுதலு—க்ஷேமமு கொரகை முதான சீக்ரமுகானே
யேமரக கஞ்சு கம்முலு—நேம முதோ னுனுப தான நிர்வக போயென்

கிருஷ்ணன் சொல்லைக்கேட்டு தங்கள் க்ஷேமத்தின் பொருட்டு ஸந்தோஷத்துடன் சீக்கிரமாக தங்கள் ரவிக்கைகளை அந்தத்வாரத்தில் திணிக்க, அவைகள் தண்ணீரின் வேகத்தினல் தக்ஷணமே அடித்துக் கொண்டு போகப்பட்டன.

க்ருஷ்ணு மாகேமி:—இது நௌகா சரித்திரம் 15-வது கீர்த்தனம். கோபியர்கள் தங்கள் ரவிக்கைகள் ஆற்றில் போனதுபற்றியும் தங்கள் பால் கருணை கொண்டு தங்களுக்கு ஏதாவது ஒரு வழி சொல்லி காப்பாற்றி யருளுமாறு வேண்டிக் கொண்டு தங்கள் விதியை நினைத்துக் கொண்டு பிரலாபித்து அழுததை இக்கீர்த்தனத்தின் மூலம் அறியலாகும்.

IV

ராகம் புன்னுகவராளி **மிச்ர சாபு தாளம்**

(8-வது மேள ஜன்யம். ஆ. நிஸரிகம பதநி அவ. நிதபமகரிஸநி.)

பல்லவி

;	ஸா ;		மா ;	; ;	மா	கா ;	ரீ ;	கா ;
	க்ருஷ்		ணு		மா	.	கே	மி
	மா	பா தா	பா ;	; ;	;	; ;	பா ;	தா பா
	தோ	. .	வ			.	பல்	கு .
;	கா ;		மா ;	பா ;	பா	பா ;	பா ;	தா பா
	கீர்த்		தி .	கல்	கு	னு	தே .	வ .
	மாப	நிபத	பமாக	கா ;	காக	பமத	பமகா	ரீ ஸா
	தே .	. . .	வ . .	.	பா .	. . .	ல . .	. .

(சரணங்களை பல்லவி போன்றே பாடவும்.)

அக்பர் காலத்துக் கூஜா

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கபடற்ற தன்மையைக் கண்டு, ஜஹாங்கீர் அவனைத்தன் உயிரினும் மேலாக மதித்துக் காதலித்தான், ஆனல் புரு தனக்குச் செய்த உதவியை அவன் மறக்கவில்லை. அந்தப் புருவின் ஒரு முட்டையை அவன் மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வைத்திருந்தான் ஸ்படிகக் கண்ணாடியால் செய்யப்பட்ட ஒரு ஜாடியில் அது எப்போதும் அவன் முன்பு தொங்கவிடப் பட்டிருக்கும். பின்பு அந்த முட்டைதான் 'ஜஹாங்கீர்காலத்து முட்டை' என்று பிரசித்தியடைந்தது அதைத்தான் மேஜர் டக்ளஸ் போன வருஷம் டில்லியில் ஒரு முகம்மதியக் கனவானிடமிருந்து முன்நூறு ரூபாய்க்கு வாங்கினார்."

"அப்படியா சேதி!"

"ஆமாம்; இனிமேல் அவர் என்னிடம் வந்து தம்மைப் பீத்திக்கொள்ளமுடியாது, என் அக்பர் காலத்துக் கூஜா அவருடைய ஜஹாங்கீர் காலத்து முட்டையைவிட ஒரு தலைமுறை பழைமையானது."

"இந்த உறவுப்படிப் பார்த்தால் உங்கள் கூஜா அவருடைய முட்டைக்கு அப்பனாய்விட்டது."

துரை லாலாஜிக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்துவிட்டு விடைபெற்றுக்கொண்டான். லாலாஜியை இப்போது பார்க்க வேண்டுமே! முகத்தில் ஆறு நாட்களாக க்ஷவரம் செய்யாமல் வளர்ந்திருந்த ஒவ்வொரு தாடி மயிரும் ஆனந்த அலைகளை வீசிக்கொண்டிருப்பதுபோலத் தோற்றியது. என்ன நண்பரே! எனக்காக இருநூற்றைம்பது ரூபா வீட்டிலிருந்து கொண்டு வந்தீர்களோ? பணம் எங்கே யாரிடம் வாங்கினீர்கள்? உங்களிடத்தில் தான் பணம் இல்லையென்றீர்களே?" என்ருர்.

"இந்த ரகசியம் என்னைத் தவிர என் கடவுளுக்கும் தெரியும். நீங்கள் அவனையே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். நான் சொல்லமாட்டேன்"

"நீங்கள் எங்கே இடபோதே புறப்பட்டுவிட்டீர்கள்? உங்களோடு எனக்கு வேலை இருக்கிறதே; இரண்டு மணி நேரத்துக்கு"

"இரண்டு மணி நேர வேலையா?"

"ஆமாம். இன்னும் உங்கள் முதுகைத்தட்டி ஸபாஷ் கொடுக்க வேண்டும். அதில் ஒரு மணிநேரம் பிடிக்கும். பின்பு உங்களைக் கட்டித் தழுவிக் கொண்டு வந்தனமளிக்கவேண்டும்; அதற்கும் ஒரு மணி நேரம் பிடிக்கும்."

"அது இருக்கட்டும், முதலில் உங்கள் ஐந்நூறு ரூபாயை எண்ணி, சரிதானு என்று பார்த்துக்கொள்ளுங்கள்."

ரூபாய் தன்னுடையதாக இருக்குமானல், அதை எண்ணி எண்ணி, சரிதானு என்று மூரர்ப்பது, மனிதனுக்குச் சுக பா... கர்ச்சியம ... ளிக்கக் கூடிய ஒரு காரியம். அப்போது மனிதன் சகஜமாக அவ் வேலையிலேயே லயித்துப் போகிருன். லாலாஜி தம் வேலையை முடித்து விட்டுத் தலை நிமிர்ந்தார். பிலவாசி அதற்குள் அந்தர்த்தானமாகி விட்டார்.

அவர் வேகமாக அடியெடுத்து வைத்துத் தெருவிலே போவது தெரிந்தது.

அன்றிரவு பிலவாசிக்கு வெகு நேரம் வரையில் தூக்கம் வரவில்லை. துப்பட்டியைப் போர்த்துக் கொண்டு கட்டிலில் படுத்திருந்தார். ஒரு மணிக்கு அவர் எழுந்தார். மெல்ல, மிகவும் மெதுவாகச் சந்தடி செய்யாமல் சென்று, அவர் தம் மனைவியின் கழுத்திலிருந்த பொற் சங்கிலியிலிருந்து ஒரு சாவியை அவிழ்த்தெடுத்தார். பிறகு அவளறையில் சென்று அந்தச் சாவியால் அவள் பெட்டியைத் திறந்தார். அதில் இருநூற்றைம்பது ரூபாய் நோட்டுக்களை முன்பு இருந்தாற் போலவே வைத்து பூட்டினா. மீண்டும் சந்தடி செய்யாமல் வந்து சாவியை முன் போலவே அவள் கழுத்துச் சங்கிலியில் கட்டினர்: அதற்கப்புறம் அவர் ஒரு சிரிப்புச் சிரித்துக் கொட்டாவி விட்டார்; கொட்டாவி விட்டுப் படுத்துக் கொண்டார்; படுத்துக்கொண்டு இறந்து விட்டார்.

இறந்தவர் மறுநாள் காலை எட்டு மணிக்குத் தான் பிழைத் தெழுந்தார்,

புது வருஷ தீபாவளி ஜவுளிகள்

வழக்கம்போலவே இவ்வருஷமும் எங்கள் சொந்த தறிகளில் புதுமாதிரியான பார்டர்கள் வைத்து கொள்ளேகாலம் பட்டினல் தயாரித்த **பட்டு சேலைகள், தாவணிகள் - வேஷ்டி நூல் புடவை ரகங்களும் ஏராளமாய் ஸ்டாக் செய்துள்ளோம்.**

ஆறணி ஸில்க் ஹவுஸ்,

17, T. P. கோவில் தெருவு, திருவல்லிக்கேணி, மதராஸ். ஹெட் ஆபீஸ்:-ARNI. (N. A.)
பிராஞ்சு:— 85, பெரிய தெருவு, கும்பகோணம்.

Proprietors:— K. M. KANDASAMI CHETTIAR, ANNAMALAI CHETTIAR.

மதனமஞ்சரி மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாது கேடுகள் முதலியவற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியு முண்டாகும். விலை ரூ. 1/-.

மதன மஞ்சரி பார்மஸி, 184, சைனபஜார் ரோடு, மதராஸ்.
புரசவாக்கம் : எஸ். டி. பல்டானே.
ஊரிகம் : டி. ஜான்ஸன் & பிரதர்ஸ்.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

ஜகன் மோகினி நூல்கள்

சந்திரமண்டலம்	1 0	வீரவஸந்தா	0 8
மகிழ்ச்சி உதயம்	0 10	நளினசேகரன்	0 8
ஆனந்தஸாகர்	0 8	மூன்று வைரங்கள்	0 8

சுதேசமித்திரன் புத்தகசாலை, மவுண்ட்ரோட், மதராஸ்.

சிறுவர் கதை

★

துரத்ருஷ்ட பொம்மை

★

ஜே. பார்த்தஸாரதி

அவள் பெயர் சேஷி. நீங்களும் நானும் வாழ்க்கையில் சந்திக்கக்கூடிய பெண் அல்ல சேஷி. ராஜாராமையர் புத்திரி சுந்தரி சீராட்டி வளர்க்கும் பொம்மை. சேஷம்மாளுக்கு உடம்பு முழுதும் காயம்; கீழே போட்டு உருட்டியதால் கன்னங்களில் குழிகள். போதாக்குறைக்கு ஒரு கண், ஒரு கால், ஒரு கை இல்லை. ஆனால் நீங்கள் கண், கால் கையுள்ள பக்கத்திலிருந்து பார்த்தீர்களானால் மிக நன்றாகத் தானிருப்பாள் சேஷி.

ராஜாராமையர் வீட்டுக்கு வருபவர்கள் சுந்தரியை "இவ்வளவு அழகான பெயர் வைத்துக் கொண்டிருக்கும் நீ எவ்வளவு சமத்தாக இருக்க வேண்டும்?" என்று அடிக்கடி சொல்லுவார்கள். இதைக் கேட்டுக் கேட்டு சுந்தரிக்கு மனது எரிச்சல் எடுத்தது. "எனக்கு என்னத்துக்கு இவ்வளவு நல்ல பெயர் வைக்கணும்? பெரிய தொந்திரவாகவல்லவோ இருக்கிறது! ஒவ்வொருவரும் தங்களுக்கு இஷ்டமான பெயரை வைத்துக் கொள்ள சுவாதீனம் கிடையாதா?" என்று எண்ணமிடுவாள்.

ஒரு நாள் இம்மாதிரி யோசனையிலாழ்ந்திருக்கும் போது, சுந்தரிக்கு சேஷியின் ஞாபகம் வந்தது. "பாவம், சேஷி என்ற பெயர் உனக்குப் பிடிச்சிருக்கா? பிடிக்காட்டா அழாதேம்மா. கண்ணெல்லாம் வீங்கிப் போச்சு" என்று தன் பொம்மையின் கண்களைத் துடைத்தாள். "நீ அழகாகத்தானில்லை. நீ ஒரு முழு பொம்மையில்லாமல் பாதி பொம்மை தான். அதனாலே தான் அம்மாக்கு உன் மேலே பிரியமதிகம். கொஞ்சம் பொறுத்திண்டிரு. அம்மா உனக்கு நல்ல சட்டை, ஸில்க் பாவாடை,' எல்லாம் வாங்கித்தருவா" என்று கொஞ்சினாள். "அம்மா" என்று சுந்தரி குறிப்பிட்டது வேறு யாருமில்லை; பொம்மைக் குழந்தைக்கு அம்மாவாகிய அவளே தான்.

சேஷியிடம் சுந்தரிக்கு இவ்வளவு பிரேமை வரக் காரணமென்ன? அவளுக்கு மூன்று பொம்மைகளிருந்தன—சரோஜினி, லீலா, சேஷி என்று அவைகளுக்குப் பெயர். சரோஜினியும் லீலாவும் நல்ல புத்தம் புது பொம்மைகள்; அப்பா செல்லாராம் ஷாப்பிலிருந்து வாங்கிக்கொண்டு வந்தவை. ஆனால், சேஷியோ, வெகு நாளாக அவளுக்குத் துணையாயிருந்த பழைய மரப்பாச்சி! பாவம், பழைய மரப்பாச்சியை யார் தேடுகிறார்கள் இந்த நாகரீக காலத்தில்? சேஷிக்கு இந்த உலகத்திலே பிரியமானவள் ஒருத்தி இருந்தாள், அது சுந்தரிதான்.

வரலக்ஷ்மி நோன்பு நாளன்று சாயந்திரம் பக்கத்து வீட்டு ஜயாவும் சுலோசனாவும் சுந்தரியுடன் விளையாட வந்திருந்தார்கள். சுந்தரியின் மூன்று பொம்மைகளில் ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு பொம்மையைத் தன் பெண்ணாக நினைத்துக்கொண்டு விளையாடுவதாகத் தீர்மானித்தனர். ஜயா, புது பூட்ஸ் அணிந்திருந்த சரோஜினியைத் தன் குழந்தையாக வரித்தாள்; சுலோசனாவின் கண்கள் லீலாவின் மேல் விழுந்தன. சட்டென்று சுந்தரிக்கு பொம்மை இல்லையே என்ற ஞாபகம் வந்தது அவ்விருவர்களுக்கும். "ஐயையோ, உனக்கு விளையாட ஒரு குழந்தையும் வேண்டாமா? நீ அந்த தரித்திரம் பிடித்த மரப்பாச்சியையா எடுத்துக்கப்போறே?" என்று ஜயாவும் சுலோசனாவும் சுந்தரியை ஒரே மூச்சில் கேட்டார்கள்.

சுந்தரியின் கண்களில் அநாதையாக விடப்பட்ட சேஷிக்காக, நீர்த்துளிகள் தோன்றின. பாவம், அநாதைகளுக்கு கதி ஏது இவ்வுலகத்தில்! தன் கண்ணீரை மறைப்பதற்கு ஒரு புறமாகத் திரும்பிக் கொண்டாள் சுந்தரி. "நீங்கள் தான் சேஷியை எனக்கு விட்டுவிட்டீர்களே. அவள் எனக்கு ரொம்பப் பிரியம்" என்று தழதழத்த குரலில் சொன்னாள்.

சுந்தரியின் தோழிகள் அவள் சொன்னதை நம்பவில்லை; விளையாட்டென்று நினைத்து சிரித்தார்கள்.

"அதுக்குக் கண்ணுமில்லை; கையுமில்லை; காலுமில்லை; மகா விகாரம்" என்றாள் ஜயா.

'முழு மரப்பாச்சியுமில்லை; அரைமரப்பாச்சி' என்றாள் சுலோசனா.

"அதனால் தான் அது எனக்குச் செல்லம்" என்று சொல்லி, ஒற்றைக் கண்ணும் கையும் காலுமுடைய சேஷியை, சுந்தரி தன் கண்களில் ஒத்தி முத்தமிட்டாள். 'அம்மாவின் செல்லமோல்லியோ' என்று மார்பில் அணைத்துக் கொண்டாள்.

இரவு குளிரால் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து பாதுகாருங்கள்

இரவிலுள்ள குளிர்ச்சியான காற்றில் வெளிக்கிளம்பினால் குளிரோ அல்லது ஜலதோஷமோ ஏற்படக்கூடும். இவை நிமோனியா வாகவும் மாரலாம். எனவே பேப்ஸ்கிருமிநாச சுவாச மாத்திரைகளை உட்கொள்ளுங்கள். பேப்ஸ் வாயில் கரைந்தவுடன் ஏற்படும் மருந்து பூர்வமான ஆவி சுவாசத்துடன் கலந்து, சுவாசப் பைக்குச் செல்லுகின்றது. பேப்ஸ் தொத்துகிருமிகளை ஒழிப்பது மட்டுமின்றி உங்கள் தொண்டை, மார்பு, சுவாசப் பைகளை பலப்படுத்துகின்றது. இருமல் ஜலதோஷம், இன்புளுயன்ஸா, முதலியவற்றை பேப்ஸ் சீக்கிரம் ஒழித்துவிடும். விலை ரூ. 1 எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். ஏஜண்டுகள்: மேஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் பேப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்.



கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சிக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

★ தீபாவளி! நவம்பர்மீ 7உ தீபாவளி! ★

தெய்வீகத் திருநாள்

அன்றைய தினம்

புது உடையில் - புது மனதில் - புது வாழ்க்கையில்

புதுப்படம்

-: மனோன்மணி :-

என்ற காதல் சித்திரத்தை

மனைவி மக்களுடன் கண்டு ஆனந்தியுங்கள்.



வெளிவரும் ஊர்கள்

★

சென்னை
பெங்களூர்
மதுரை
கோவை
காரைக்குடி
சேலம்
காஞ்சீபுரம்
வேலூர்
நாகர்கோவில்
திருநெல்வேலி

— முதலிய நகரங்களில் —

விபரங்களுக்கு :

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம், மதுரை.